விலை ரூபா 2-00 ★ 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 மார்கழி 15 ரபி-ஆகி 7 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (30—12—84) இதழ் 316

## தமிழ் நாட்டுக்கு ரஜீவ் வாழ்த்து

(புதுடில்லி)

பிரதமர் ரஜீவ் காந்தி நேற்று காலை தமிழ் நாடு நிதி அமைச்சர் திரு. நெடுஞ்செழியனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமிழ்நாட்டில் காங்கிரஸ், அ.தி மு.க கூட்டணி பெற்றுள்ள வெற்றிக்கு தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார். (12ம் பக்கம் பார்க்க)

## சாதனை படைத்த ரஜீவ்



(புதுடில்லி)

இந்திய சுதந்திரத்தின் பின்னர் நடந்த ஏழு பொதுத்தேர்தல்களிலும் வெற்றி பெற்ற ஆளும் கட்சிகள் பெற்ற ஸ்தானங்களைவிட இத்தேர்தலில் திரு. ரஜீவ் காந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அதிகமான ஸ்தானங்களை கைப்பற்றியுள்ளது.

இந்திய சரித்திரத்தில் ஜவகர்லால் நேரு தலைமையில் பிளவுபடாத காங்கிரஸ்கட்சி 1957ம் ஆண்டு பொதுத்தேர்தலில்தான் ஆகக்கூடுதலாக 371 தொகுதிகளைக் கைப்பற்றியது. இச்சாதனை 27 வருடங்களின் பின்னர் இத்தேர்தலில்தான் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை வெளியான 483 தேர்தல் முடிவுகளில் இந்திரா காங்கிரஸ் 385 இடங்களை பெற்றுள்ளது இன்னமும் 39 தொகுதிகளின் முடிவுகள் (12ம் பக்கம் பார்க்க)

## கணவர்கள் உயிரை மீட்டுத் தாருங்கள்!

[கொழும்பு]

தமது கணவர்களின் உயிரைக் காக்க எவருடனும் தொடர்புகொள்ளத் தயாராக இருப்பதாக யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களின் மனைவியர்கள் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

யாழ் பிரஜைகள் குழு மூலமாகவோ அல்லது எவர் மூலமாகவோ தமமைத் தொடர்பு கொள்வதற்கு வசதிசெய்து தருமாறு கேட்டுள்ளார்கள்.

தமது கணவர்களின் உயிருக்கு எவ்வித தீங்கும் ஏற்படுத்திவிட வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(2-ம் பக்கம் பார்க்க)

## எம். ஜி. ஆர். மனைவியுடன் ரஜீவ் பேசினார்

(புதுடில்லி)

பாரதப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தி நேற்று இரவு தம்முடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்தாரென்றும் அதேபோல் ரஜீவ் பெற்றுவரும் வெற்றிகள் குறித்து தனது கணவரும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டாரென்றும் திருமதி ஜானகி ராமச்சந்திரன் சொன்னார்,

## ரஜீவ் அறிவிப்பு ஊழலற்ற நிர்வாகம்!

[புதுடில்லி]

''இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்த வெற்றி நாட்டில் [illegible] பாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் கிடைத்த மாபெரும் வெற்றி'' என்று பிரதமர் திரு ரஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து நேற்று செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அவர் அவ்வாறு தெரிவித்தார்.

''நாட்டில் ஊழலற்ற சிறப்பான நிர்வாக முறையை ஏற்படுத்துவதும் நமது பணியாகும் என்றும் அவர் சொன்னார்.

## ராஜினமா

[பெங்களூர்]

நடைபெற்ற லோக்சபா தேர்தலில் கர்னாடக மாநிலத்தில் ஜனதா கட்சி படுதோல்வி அடைந்தமையைத் தொடர்ந்து மாநில முதலமைச்சர்திரு இராமகிருஷ்ண ஹெக்டே தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார். இவர் தமது அமைச்சரவையையும் கலைத்துள்ளார்.

## சிறில்மத்யூ மகனுக்கு அமைச்சர் பதவி?

(கொழும்பு)

பதவி நீக்கம் செய்யப்பட்ட கைத்தொழில் அமைச்சர்சிறில் மத்யூவின் மகனும், கொலன்னவை எம்.பி.யுமான திரு. நந்தாமத்யூவுக்கு தொழில் அமைச்சர் பதவி வழங்கப்படலாமென்ற பேச்சு இப்போது அரசாங்க வட்டாரங்களில் அடிபடுகிறது.

## ஒருவரைத்தவிர தமிழக அமைச்சர்கள் அனைவரும்வெற்றி!

[சென்னை]

தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பல முக்கிய தலைவர்கள் வெற்றி கண்டனர்.

முதலமைச்சர் திரு எம் ஜி. ராமச்சந்திரன், அமைச்சர்கள் நெடுஞ்செழியன், காளிமுத்து எஸ் என். ராஜேந்திரன், கோமதி சீனிவாசன், அரங்கநாயகம், எஸ். ராமச்சந்திரன் கே கே. எஸ். எஸ் ஆர் ராஜேந்திரன், முத்துசாமி, பொன்னையன், வீராசாமி' அருணசலம் எஸ்.ஆர். ராதா கே.ஏ கிருஷ்னசாமி, திருநாவுக்கரசு, ஆகியோர் வெற்றி பெற்ற அமைச்சர்கள் தமிழக அமைச்சர்க

(12-ம் பக்கம் பார்க்க)

## தி.மு.க. கூட்டணி படுதோல்வி

[சென்னை]

தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் படுதோல்வி கண்ட தி.மு க தலைமையிலான கூட்டணியில் போட்டியிட்ட முக்கிய பல தலைவர்கள் தோற்றுப் போய்விட்டார்கள்

1980 தேர்தலில் 32 இடங்களை தி மு க பெற்றிருந்தது ஆனல் இம்முறை 2? இடங்களை மட்டுமே பெற்றுள்ளது.

தி.மு.க முன்னுள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் திருச்சி-2தொகுதியில் அ.தி.மு க. வேட்பாளரிடம் தோல்வி கண்டார். நெல்லிக்குப்பம் கிருஸ்ணமூர்த்தி, ஆற்காடு வீரசாமி, தி.மு.க தலைவர் திரு மு. கருணநிதியின் புதல்வர் ஸ்டாலின் ஆகியோர் திமுகவில் தோல்வி கண்ட முக்கிய மானவர்கள்.

தமிழ்நாடு காமராஜ்-காங்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## முதல்வராகப் பதவி ஏற்பார் எம்ஜிஆர்

(சென்னை)

தமிழ் நாட்டில் தனிப் பெரும் கட்சியாக அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ள அண்ணா திராவிட முனனேற்றக்கழகத்தின் தலைவர் எம். ஜி ராமச்சந்திரனே தமிழகத்தின் முதல்வராக மீண்டும் பதவி ஏற்பதற்கான ஏற்பாடுகள் இப்போது மேற்கொள்ளப் பட்டுவருவதாக தமிழகத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

நியூயோர்க்கில் இடபோது போது எம். ஜி ஆர் சிகிச்சை பெற்று வந்தபோதிலும் அங்கிருந்துகொண்டே அவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதுபோல, முதல்வராகவும் அவர் பதவியேற்கவேண்டுமென்ற தமிழக மக்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்து வைப்பதில் திரு. நெடுஞ்செழியன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்..



நியூயோர்க் மருத்துவமனையிலிருந்துகொண்டு முதல்வராகப் பதவியேற்கக்கூடிய முறையிலோ அன்றி அவர் இங்கு வரும்போது அப்பதவி அவருக்

(12ம் பக்கம் பார்க்க)

## நியூயோர்க்கில் நிருபர்கள் சந்தித்தனர் எம்ஜிஆர் வெற்றிப்புன்னகை

[நியூயோர்க்]

பெரும் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டிருக்கும் நியூயோர்க் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் எம். ஜி. ஆரை நிருபர்கள் சென்று பார்த்தனர். தமிழ்நாட்டுத் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் இசசந்திப்பு நடந்தது

திரு. ராமச்சந்திரன் தமது அறையிலிருந்து நிருபர்கள் காத்திருந்த இடத்துக்கு நடந்து சென்றார்.

அங்கு அவர்களுக்கு மத்தியில் அமர்ந்து கொண்டார் பத்துநிமிடங்கள் வரை அமர்ந்திருந்தார்.

எம். ஜி. ஆரிடம் [illegible] கள் எதுவும் கேட்க வேண்டாமென்று டாக்டர்கள் நிருபர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

எம். ஜி. ஆர். வேஷ்டி சட்டையுடன் குல்லாயும் கறுப்புக்கண்ணடியும் அணிந்திருந்தார்.

அவர் இரட்டை விரல்களைக்காட்டி வெற்றிப் புன்னகை பூத்தார். அப்போது காமிரா வெளிச்சங்கள் மின்னி மின்னி மறைந்தன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோப்பாய் கைதடி ரோட்டில் 16×10 அளவுள்ள கிறசர் மெஷினும், காணியும், E. N 9535 தொடர்பிலக்க A 50, (கேம்பிறிஜ்) காரும் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு:- இ பாலகிருஷ்ணன், இருபாலை வீதி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1135

முட்டையிடத் தொடங்கி மூன்று மாதமான சிகப்பு வெள்ளை நிறமான (Shetna Farm) 200 கோழிகளும் தகரத்திலான அதன்கூடும் விற்பனைக்கு- விசாரிக்கவும் கண்ணன் ஸ்ரோர்ஸ் திருநெல்வேலிச்சந்தி. 1127

யாழ். மாநகர எல்லைக்குள் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் அத்தியடி புது வீதியில் 5 அறை வீட்டுடன் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- A. S. அருளானந்தம் 8B புது வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். 1120

45 நாள் சுத்தமான அல்சேசன் (Pine Alsation) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ச. தியாகராசா, கேணியடி லேன், திருநெல்வேலி. (1077)

உயர்ந்த தேக்கிலான வரவேற்பறைக் கதிரைகள் நான்கு சோபாவுடன் அலங்காரத் தாங்கிகள், விளக்குத் தாங்கி, நாஷனல் 20 அங்குலம் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, நாஷனல்(உறையாத) குளிர்சாதனப்பெட்டி, சமையலறை மின்சாரப் பொருட்கள் இன்னும்பலவும் விற்பனைக்குண்டு விரையுங்கள். 139, கன்னதிட்டி, வீதி யாழ்ப்பாணம். 1148

கண்டி ரோட் அரியாலை யூதா கோவில் சிலை முன்பாக 2½ பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க 18, கச்சேரி நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். 1150

நல்லூரில் முத்திரைச்சந்திக்கு அருகில் 2½ பரப்பு காணியில் 4 அறைகளுடன் நவீன வசதிகளுடன் புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. விளம்பர இல. 1055 தொடர்பு; C/O 'ஈழநாடு. 1055

## தேவை

எமது பேக்கரிக்கு கேக் பணிஸ் மற்றும் சுவீற்ஸ்வகைகள் தயாரிப்பதில் அனுபவமும் திறமையும் உள்ள பாஸ் ஒருவர் உடன் தேவை நேரில் வரவும் ஹோட்டல் ரேலெக்ஸ் 340 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம், 1085

அனுபவமும், திறமையும் உள்ள றேடியோ திருத்துனர் (Radio Technishans) தேவை உடன் நேரில் வரவும். EXPO ELECTRONICS NO 45 KASTHURIAR ROAD, JAFFNA. 1132

## சோதிடம்

கைரேகை சோதிடம், பிறநாட்டுப்பிரயாணம், தொழில் வாய்ப்பு, உயர்கல்வி, காதல், கல்யாணம், தீராத நோய்கள், வாழ்க்கைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், சிறந்த திருமணப் பொருத்தம், தொலைந்த சாதகங்கள் எழுதவும், தீர்க்கமான ஆலோசனை பெறவும். புத்தாண்டு 1985 நல்லவையுடன் பொலிய வாழ்த்தும், இராசேந்தின்; ''திருவுளம்'', பிறெஸ் லேன், ஸ்ரேசன் ரோட், கொக்குவில். 1149

## தேவை

குடும்பப் பொறுப்பு குறைவான முதிய வான் சாரதி தேவை தங்கியிருக்கக் கூடியவர் விரும்பப்படுவர். பிரவுண் சன் ரேட் சென்ரர், ''கூட்டுறவுக் கட்டிடம்'', கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1155

## தவறிவிட்டது

சங்கானைச் சந்தைக்கும் சிரணிச் சந்திக்குமிடையே எனது சாரதி லைசென்சும் வாகனம் ஓடுவதற்கான அனுமதிப் பத்திரமும் தவறிவிட்டது. கண்டெடுத்துத் தருபவருக்குச் சன்மானம் வழங்கப்படும் சண்முகதாசன், ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். தொலைபேசி 22348. 1156

25-12-84 ல் ஊர்காவற்றுறை சுருவில் ரோட்டில் ரோணி றவிலோசனு சில்வஸ்ரர் என்பவரின் அடையாள அட்டை (இல.673460020V) தவறிவிட்டது, கண்டெடுத்தவர்கள் தயவு செய்து எஸ். குணரத்தினம், இலங்கை வங்கி, ஊர்காவற்றுறைஅல்லது 128, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். 1153

## வாடகைக்கு

கொழும்பு கண் ஆஸ்பத்திரிக்கருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீட்டில் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. விளம்பர இல. 1157 C/O. ஈழநாடு 1157

யாழ். மருத்துவக் கல்லூரிக்கு எதிராக கோணமலை வயிரவர் கோயிலுக்கு முன்பாகவுள்ள ஒழுங்கையில் புதிதாக கட்டப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு. 19. கோணமலைலேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 1142

## மலிவு விற்பனை

100 லன்ச்சீட் ரூபா 5/-100 குரோசறிபேக்ஸ் ரூபா4/- 100சொப்பிங் பேக் ரூபா 18/-100மார்கெட்டிங் பேக் ரூபா 44/-100கரியர்பேக்ரூபா 180/- 1கிலோ பொலித்தீன் ரூபா 33/-1பைக் கட் ஸ்ட்ரேஸ்ரூபா8/50 வியாபாரிகளுக்கு கழிவுகள்

Ceyco Traders
180/6 7B Keyzer Street
(உள்ளே)Colombo 11
1019

## தீயிட்டுக் கொளுத்தினர்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் ஐயாயிரம் குடியிருப்பாளர் அட்டவணை தயாரிக்கும் பத்திரங்கள் இனம் தெரியாத இளைஞர்களினால் தீக்கிரையாக்கப்பட்டன. கடந்த புதன் கிழமையன்று இந்த அலுவலகத்திற்கு வந்த இளைஞர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த குடியிருப்பாளர் அட்டவணை தயாரிக்கும் பத்திரங்களை கட்டுக்கட்டாக எடுத்துச் சென்று தீயிட்டுக் கொளுத்தினர்கள்.

இச்சம்பவம் பற்றி உதவி அரசாங்க அதிபர் யாழ். பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

## இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து



### நிருஷா

பரந்தன்முரசுமோட்டை பாலசுப்பிரமணியம் கனகமணி தம்பதிகளின் புதல்வி செல்வி நிருஷா தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று 30-12-84 ஞாயிற்றுக் கிழமை தனது இல்லத்தில்அமைதியாகக்கொண்டாடுகிறார். அப்பா, அம்மா, தம்பிநிரோஷன் அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, அத்தைமார் யாழ்ப்பாணம் பெரியமாமா குடும்பத்தினர், சின்னமாமி குடும்பத்தினர், ஜெனிவா மாமா, யாழ்ப்பாணம் கலாமதி குடும்பத்தினர் நிருஷாவை நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர். 1158

## பிறந்த நாள் வாழ்த்து



### ஸ்ரீ சர்மிளா

சங்கானை நாகலிங்க சுவாமிகள் வீதி ஸ்ரீதரன் சுந்தரி தம்பதிகளின் செல்வப்புதல்வி சர்மிளா தனது 2வது பிறந்த தினத்தைஇன்று30-12-84ல் தனது இல்லத்தில் குதூகலமாக கொண்டாடுகிறார். இவரை பேரும் புகழும் பெருவாழ்வு பெற்று சகலகலைகளையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வென லண்டனில் உள்ள இவரின் அப்பா, அம்மா, சங்கானை அப்பப்பா அப்பம்மா, மாமிமார், மாமா, பெரியப்பா, பெரியம்மா சிங்கப்பூர் அம்மம்மா அப்பப்பா, மாமா, மாமி, மைத்துனி ஆகியோர் அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

V. செல்லத்துரை
நாகலிங்க சுவாமிகள் வீதி,
சங்கானை.
1141

## மோட்டார் சைக்கிள், டி. வி. கொள்ளை!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவன பொறியியலாளர் விடுதியில் இருந்து இரு மோட்டார் சைக்கிளுடன் தொலைக்காட்சி பெட்டி கொள்ளையிடப்பட்டுள்ளது.


# ரெருசோ ஷிப்ஸ்
# TERRAZZO CHIPS

IMPORTED

- ★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN and HOLLAND)
- ★ அலுமினியம் தகடுகள் (18g × 16g)
- ★ வெள்ளைச் சீமெந்து
- ★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
- ★ TERRAZZO-மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம் RS. 55/-க்கு மேல்

## றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு- 12.
தொலைபேசி: 34411 — 31511


## ஓராண்டு நினைவஞ்சலி

### நாகலிங்கம் பாலகிருஷ்ணன்

(யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைச்சேர்ந்த சிற்பாசாரியார்)



மலர்வு: 15-08-1924
உதிர்வு: 11-01-1984

அன்புடனும் பாசத்துடனும் எமது குடும்பத்தின் தெய்வமாக விளங்கி எமக்கெல்லாம் நல்வாழ்வு நல்கிய அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் உங்களது நினைவு என்றும் எம்மைவிட்டுப் பிரியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

அன்பு மிகு
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

291, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1124

## 1-வது நினைவஞ்சலி

### அமரர் தம்பிமுத்து துரைராசா

(பொலிஸ் சார்ஜண்ட்)

மலர்வு: 23-10-48 உதிர்வு: 30-12-83

இறைவனை இறைஞ்சும் அன்பு மனைவி, மகன் மைத்துனன், சகோதரர்கள்.

பொன்முருகன் இல்லம்,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

1136


# SCIENCE ACADEMY
## JAFFNA.

சகல A/L வகுப்புக்களும்
29-12 84 தொடக்கம் ஆரம்பம்
A/L 85 Paper Classes ஆரம்பம்
GANA'S ACADEMY
தட்டாதெரு சந்தி.
1-1-85 தொடக்கம் வகுப்புக்கள் நடைபெறும்
விபரங்கள் நேரில்
A/L 85, 86 தினசரி நடைபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

## உள்ளம் உவப்ப வருக

வானம் பொழியவும் வையகம் குளிரவும்
ஞானம் சிறப்பவும் நல்லோர் மகிழவும்
வருக புத்தாண்டே வருக புத்தாண்டே
ஏங்கிய விழிகளின் ஏக்கம் நீங்கவும்
கலங்கிய உள்ளம் நலம்பல எய்தவும்
வாடிய முகங்கள் மலர்வினை எய்தவும்
வருக புத்தாண்டே வருக புத்தாண்டே
இருளினைப் போக்கி ஒளியினைத் தரவும்
சஞ்சலம் நீக்கி நெஞ்சுரம் நல்கவும்
வருவாய் வருவாய் வரவேற்கின்றோம்
புட்களின் ஒலியும் பொழுதின் அழகும்
பூக்களின் மலர்வும் நின்னையே அழைத்தன
அதர்மம் போயது தர்மம் வந்ததே
என்று நாம் உவப்ப வருக புத்தாண்டே

– முரளி

## ஹிரோஷிமா அழிவின் வரலாறு

# அறுபதினாயிரம் மக்களைப் பலி கொண்ட அணுகுண்டு!

'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைத்தலும் புதுவது அன்று இவ்வுலகத்தியற்கை'
(புறநானூறு-76, 1-2)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புறநானூற்றுப் புலவன் கண்ட உண்மை இது 'ஒருவனை ஒருவன் கொல்லுதலும் ஒருவனுக்கு ஒருவன் தோற்றலும் புதுமையானவையல்ல. உலகத்தின் இயற்கை இது' என்று அவன் கூறுவதிலிருந்து அவனுக்கு எவ்வளவோ காலத்திற்கு முன்பே காலங்கடந்த நிலையான உண்மையாக அழிவும் தோல்வியும் இருந்தே வந்துள்ளன என்பது தெளிவு. உலக வரலாறு முழுவதுமே போரும் குருதியும் பிணவாடையுமாகவே இருந்துவந்துள்ளன.

ஆனல் சிந்தனையாற்றலும் மனிதாபிமானமும் நிறைந்த சான்றோர்கள் எல்லாக் காலத்திலும் இந்த உண்மையைப் பொய்யாக்கிச் சமாதானச் சகவாழ்விற்கு வித்திடவே முனைந்த முயற்சிகளுக்கும் குறைவில்லை.

'மனோன்மணீயம், என்ற நாடக நூலினைச் சென்ற நூற்றுண்டின் இறுதியிலே பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை எழுதினர். தன்னையே முற்று முழுதாய் நம்பியிருந்த ஜீவக வழுதிக்குத் துரோகத்தின் மேல் துரோகமாய் இழைத்து அவனை முற்றாக அழிக்க முற்பட்ட கொடியவனான குடிலனின் மனச்சான்று ஒரு நிலையிலே பின்வரும் கேள்வியை எழுப்புகின்றது.

### சொக்கன்

'ஒருவனது ஆசைப் பெருக்கால் உலகில்
வருதுயர் கடலிற் பெரிதே வானின்
எழுந்த இவ் இரவி விழுந்திடு முன்னர்
ஈண்டு அணிவகுக்கும் இக் காண்டகும் இளைஞரில்
மாண்டிடும் அவர் தொகை மதிப்பார் யாரே?
(மனோன்மணீயம் 4-1, 2-7)

மன்னன் ஆட்சி ஓங்கி நின்ற காலத்தில் அவனுடைய ஆசைத் தீயை மேன் மேலும் கனன்று எழவைக்கப் பல்லாயிரம் படைவீரர் களத்தில் உயிர்கொடுத்த வரலாறு மிக நீண்டதுதான். பகவத்கீதை மன்னர் நடத்திய போரை 'க்ஷத்திரிய தருமம்' என்று நியாயப்படுத்துவதும் நாம் அறிந்ததே.

ஆனல் 'மக்களுக்காக மக்களால் மக்களின் ஆட்சி' என்று மகத்துவப்படுத்தப்படும் ஜனநாயக ஆட்சியிலும் 'எல்லாரும் ஓரினம், எனப் பொதுமைப்படுத்தப்படும் சமதர்ம ஆட்சியிலும் நீண்டபெரும் போர்கள் நெடுங்காலம் நிகழ்வதும் படையணியைச் சேர்ந்தோர் மட்டுமன்றி அப்பாவிகளான மக்களே இலட்சக் கணக்கில் அழிந்துபடுவதும் இயற்கையாகின்ற பொழுது தான் கவலை மிகுதியாகின்றது.

இந்தக்கவலையின் உச்சக் கட்டத்தை நாம் இரண்டாம் உலகப்போரில் நேரடியாய் அநுபவித்தோம். 1945ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் ஆறும் நாள் யப்பானிய நேரப்படி காலை எட்டு மணிக்கு யப்பானிய துறைமுகப்பட்டினங்களுள் ஒன்ருன ஹிரோஷிமாவில் முதன்முறையாக அணுகுண்டு வீசப்பட்டது. நீண்டகால விஞ்ஞான ஆய்வின் பயனைப் பத்துக்கோடி டாலர் செலவழித்துக்கண்டு பிடித்த குண்டு அது. அமெரிக்க இராணுவ மேலாண்மைப் பீடத்தின் முடிவு இந்தக்குண்டின் மூலம் செயற்படுத்தப்பட்டது.

இதன் உடனடி விளைவாக யப்பானிய மக்கள் அறுபதினாயிரம் பேரின் உயிர் பலியாயிற்று ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லாமாக ஒரு லட்சம் பேர் படுகாயத்திற்கு உள்ளாயினர். ஏறக்குறைய ஹிரோஷிமாவின் இரண்டரை லட்சம் மக்கள் பின்விளைவான நெருப்பாலும், நச்சுப்புகையாலும் மாண்டொழிந்தனர். சில நாள்களில் யபபான் தனது தோல்வியை ஏற்றுக்கொண்டு சரணகதி அடைந்தது உலகின் சமாதான சகவாழ்விற்கு யப்யானியர்அளித்தகளப்பலியாக இதனைக் கொள்ளலாம் பரம கருணநிதியாகிய ஆண்டவனின் குழந்தைகளில் ஒருசாரார் விளையாடிய சிறியதொரு விளையாட்டு இன்னெரு சாராருக்கு வினையாக முடிந்த கதைதான் இது

இன்று உலகம் மேலும் முன்னேறிவிட்டது. மூன்ரும் உலகப்போரில் உலகம் முழுவதையும் ஹிரோஷிமாவாக ஆக்கி மேலும் பல நூறு ஆண்டுகளுக்கு உலகம் வெறும் பாழாக விளங்கச் செய்யத்தக்க சக்தி வாய்ந்த சலவாயுக் குண்டுகளும், அணுகுண்டுகளும் இன்று பலநாடுகளிலே நிறைந்து கிடக்கின்றன முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சியின் அதிர்ச்சியே இன்னமும் தீராத நிலையில் மேலும் புதியனவாய் மேற்கொள்ளப்படும் முஸ்தீபுகள் இவை!

அணுகுண்டு வீசப்பட்ட 'கறுத்த' நாளிலிருந்து பல நாள்கள்வரைஅந்தப்பயங்கரப் பசாசின் மர்மம் மர்மமாகவே இருந்துவந்தது யப்பானிய மக்கள் தமக்கு நிகழ்ந்த கொடுமையின் இரகசியத்தைப் பற்றிப் பலவாறு பேசிக்கொண்டனர். விமானம் ஒன்று நகரம் முழுவதும் கசோலினைப் பீச்சியடித்துத் தொடர்ந்து தீயையும் இட்டது என்றும், மகினிசியத்தைப் பொடியாக எங்கும் தெளித்துத் தீமூள வைத்தது என்றும் பேசிக்கொண்டனர். உலகநாடுகள் பலவற்றிலும் இந்தக்கதை வெவ்வேறு உருவங்களில் உலாப்போனது.

இந்நிலையில் இந்த அழிவிற்கெல்லாம் மூலகாரணமாயிருந்த அமெரிக்காவிலிருந்தே அணுகுண்டின் விளைவுகளை ஆராய்ந்து செய்தி வெளியிடல் வேண்டும் என்ற நல்லெண்ணமும் தோன்றியது! 'நியூயோக்கர்' (New yorker) என்ற பத்திரிகை ஜோன் ஹேசி (John Hersey) என்ற பத்திரிகையாளரும் நூலாசிரியருமான ஒருவரை ஹிரோஷிமாவிற்கே அனுப்பியது. 1946 மே மாதத்தில் அங்கு சென்ற அவர் அணுகுண்டு வீச்சின் போது தப்பிப்பிழைத்திருந்த ஆறுபேர்களை நேரிற் சந்தித்து அவர்களின் அனுபவங்களையெல்லாம் கேட்டறிந்து 'ஹிரோஷிமா' என்ற கட்டுரையை விரிவாக எழுதினர். இந்தக் கட்டுரைக்கிருந்த வரவேற்பும் இதன் வெளியீட்டு விபரங்களும் பெங்குயின் சிறப்பு வெளியீடாக வெளிவந்த 'ஹிரோஷிமா' நூலின் பதிப்பாளர் உரையிலே பின்வருமாறு தரப்பட்டிருக்கின்றன:

"நியூயோக்கரின் ஆரம்ப நோக்கம் இக்கட்டுரையைத் தொடர்ச்சியாக வெளியிடுவதென்றே இருந்தது. ஆனல் பத்திரிகாசிரியருக்கு ஏற்பட்ட திடீர்உணர் வானது அதனை முழுமையாக ஒரே இதழில் வெளியிடல் வேண்டும் என்ற முடிவை ஏற்படுத்தியது இதற்கேற்ப ஜோன் ஹேசியைக் கொண்டு அவரது மாபெரும்படைப்பினை மீளத் திருத்தி எழுதுவிக்கவும் ஆசிரியர் தீர்மானித்தார். ஜோன் ஹேசி ஆசிரியரின் வேண்டுகோளினை ஏற்றுப் பத்து நாள்களிலே தமது கட்டு

(10ம் பக்கம் பார்க்க)

மனிதனை மனிதனுக்கு பவை உதவி வசதிகளுமல்ல; இடையூறுகளும், துன்பங்களுமே.

-[illegible]

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து
LANKA CEMENT


1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'
முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'
LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது 'லங்கா சீமெந்து'
தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில இலக்கிய மேதை டாக்டர் சாமுவேல் ஜோன்சனின் 2வது நூற்றுண்டு நினைவு தினம் கடந்த 13-12-84அன்ருகும். இதனையொட்டி 'சின்ன பொஸ்வெல்' எழுதிய கட்டுரை கடந்த 9-12-84 வாரமலரில் வெளியாகியிருந்தது. கடுதாசிப் பஞ்சம் காரணமாக இக்கட்டுரையின் மிகுதிப்பகுதி அதற்கடுத்தவாரம் வெளிவர முடியாது போயிற்று. அதனை இவ்வாரம் பிரசுரிக்கின்றேம். ஆ-ர்

# பிளீட் வீதி வீட்டில் நான் கண்டதும் கேட்டதும்

பேனாவின் வேகம் குறைந்திருந்தபோதும் அவருடைய நாவன்மை என்றும் குறையவில்லை. லண்டனின் இலக்கிய உலகை தமது சொற் சாதுர்யத்தால் ஆண்டுவந்த மன்னன் ஜோன்சன் - The Best Talker that London ever Saw என்று சொல்லப்பட்டது அச்சம்தோன்ருத தூய உள்ளம் படைத்த டாக்டர் தவறணையிலும் காப்பி கிளப்புகளிலும் கூடும் அறிஞர் குழாத்துக்கு அக்கிராசனராக அமர்ந்து சொல்வதைச் சிறப்பாகவும் துணிவுடனும் விகடமாகவும் பேசிவந்தார்.

காலகதியில் அவருடைய பேச்சில் ததும்பும் விமர்னச மணிகளைக்கண்ட இலக்கிய கலைஞர்கள் லண்டனில் இலக்கியக் கிளப்- 'இலக்கிய பொது நல மாநாடு' எனலாம், ஒன்றை உருவாக்கி அவருக்கே தலைமைவழங்கினர். திறனாய்வு என்ற கலைபற்றி ஒன்றும்தெரியாத பெரியாரை இன்றைய திறனாய்வுக்குத் தந்தையென லாம்''.

1764ல் அவருடைய ஆப்த நண்பர்கள்- கோல்ட்சிமித், அரசியல் நிபுணர் பேர்க் Burke) வரலாற்று நிபுணர் கிபன் போன்ற மேதைகள் ஒன்றுகூடி அக்கால இலக்கிய சர்ச்சைகளை வாதாடிதலைவரின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வர். சிரிப்பின் கர்ச்சனையில் மிதக்கும் கருத்துக்கள் அவை.

உணர்ச்சி மேலீட்டால் பேசுபவருக்கு அவர் கொடுத்த டோஸ்; ''ஐயா கசாப்புக் கடைக்காரன் தனது நாட்டுக்காக இரத்தம் சிந்தத்தயாரென்று தீவிரப்படும்போது, அதனால் எடுபடுபவர் எத்தனை பேர்? வேண்டாம் இந்த மாய் மாலம்?''

## இரு நிகழ்ச்சிகள்

இவர் இலக்கியத்தில் இமயமென்று லண்டன்கழகம் பேசிக்கொண்டிருந்த போது இவருடைய 66ம் வயதில் ஒக்ஸ்போர்ட் D. C. L. சிவில் சட்டத்தில் கௌரவ கலாநிதி என்ற பட்டமளித்து தமது பழைய மாணவரைக் கௌரவித்தது. அன்று தொடக்கம் என்றும் அவரே டாக்டர்'

இந்த அமளியான காலத்தில் நிகழ்ந்த ஒரு சந்திப்பு ஆங்கில இலக்கிய உலகம் செய்த தவத்தின் பயனென்று கருதப்படுகிறது:

## பொஸ்வெல் (Boswell)

ஜேம்ஸ் பொஸ்வெல் என்ற ஸ்கொச் அறிஞர் ஜோன்சனின் பெருமையைக் கேள்வியுற்று அவரைச்சந்தித்து அதே நேரத்தில் அவருடைய சீடனுக அமர்ந்தார். ஸ்கொற்லாந்தையும் மக்களையும் கேலி செய்யும் டாக்டருக்கு இவரில் உண்டான பாசம் ஒரு அபூர்வமான நிகழ்ச்சி. கண்ணைக்காக்கும் இமைபோல் நெருங்கிப் பழகி 20 ஆண்டுகள் கழித்த பொஸ்வெல் உலகுக்குஅளித்த பரிசு அவருடைய ''Boswell's Lifeof Samuel Johnson'' என்ற அரும்பெரும் நூல். உலகைறிந்த சான்ருேரில் சான்ருேன் என்ற கருத்தை வெளியிட்ட இப்பெரும் நூலைப்படியாத இலக்கிய மாணவர் கொடுத்து வைக்காதவர்கள்:

## திறேல்ஸ் தம்பதிகள்

டாக்டரின் ஆளுமையாலும் பேச்சுவன்மையாலும் கவர்ச்சியடைந்த பலரில் அவருடைய வாழ்க்கைக்கு சுவை ஊட்டிய ஒரு குடும்பம் மிகப் பிரபலமானது திறேல்ஸ் (Thrales) தம்பதிகளின் வீட்டில் தமது 16 வருட லண்டன் வாழ்வு அரைவாசிக்காலத்தைக் கழித்தார். பெருஞ் செல்வன் திரு. திறேல்ஸ் தமது இளமையும் அழகும் உரையாடலில் திறமையுமுடைய மனைவியை டாக்டரின் 'தாதியாகவே' நியமித்து விட்டாரெனலாம்.

கணவனும் மனைவியும் காட்டிய பரிவு ஜோன்சனின் ஆளுமைக்கு ஒரு பரிசு. ஒரு தகப்பனின் அன்பும் பாசமும் தமது மனைவியாருக்கு கிடைத்ததையிட்டு கணவன் மகிழ்ந்தார். டாக்டரின் உணர்ச்சியைஅவர் எழுதியிருந்த பல கடிதங்கள் விளக்கும். நுண்ணிய ஆராய்ச்சிக்குரிய இத்தொடர்பை ''The endearing elegance of female friendship'' என்று மக்கொலே Macaulay பிரபு குறிப்பிட்டிருக்கிருர் ''பெண் பாசத்தில் தளைத்த நுண்ணிய நட்பு'' என்பது கருத்து.

கணவன் இறந்தபோது இன்னொருவரைக் காதலித்து கல்யாணம் முடிக்க திருமதி திறேல்ஸ் முனைந்தபோது அதனைத்தடுக்க புத்திமதி கூறியது பலனற்றபோது வாழ்ந்த வீடு பழுது போகாது சிறக்க வேண்டுமென்று அதன் நூலகத்தில் ஒரு பிரார்த்தனை நடத்தி வெளியேறினுர்ஜோன்சன்.

## நூலாசிரியர்

66 வது வயதில் டாக்டர் பட்டம் பெற்றபோதும், மக்களுக்கு அவர்குன்றின் மேலிட்ட தீபம். இதனையே நாம் பொஸ்வெல்லின் நூலில் காண்கின்ரேம். வாழ்க்கை வரலாறு, பாட்டு, நாடகம் அரிய உரைகள், கட்டுரைகள் எழுதித் தள்ளிய டாக்டரை நாம் முழுமையாகக் காணவேண்டுமென்றால் பொஸ்வெல்லிடம் போகவேண்டும்.

டாக்டரின் மிகச் சிறந்த நூல்கள்- 'ரும்பிளர் ஐடிலர், என்ற கட்டுரைக் கோவைகள் லண்டன் முதலிய சிறந்த பாக்கள் 'ஐரின்' என்ற துன்பியல் நாடகம், இலக்கிய மணிகள் நிறைந்த பெட்டகங்கள்! இருப்பினும் இவற்றை நினைவுறுத்தும் நூல் பொஸ்வெல் எழுதிய ஜோன்சன் வரலாறு.

ஷேக்ஸ்பியர் என்ற உலக மகாகவியின் நினைவுக்கு அவருடைய சிநேகர் சிலர் சகாக்கள் என்றபடியில் நின்று சில சின்னங்கள் உதவியிருக்கின்றனர் ஆனுல் டாக்டரை ஒரு உயர்ந்த பீடத்தில் வைத்து வணங்க பொஸ்வெல் உதவியிருக்கிருர்.

தமது தயார் 90ம் வயதில் இறந்தபோது, ஒரு வாரத்தில் ஒரு சிறு நூல் எழுதி ஈமக்கிரியைகளின் செலவைச் சமாளித்தார். கோல்ட்சிமித் கடன் மறியலுக்குச் சென்றபோது, எழுத்துப்பிரதி ஒன்றை அடகுவைத்து அவரைச் சிறை மீட்டார். உயர்ந்தோர் செட்டை அடக்குவதும் தாழ்ந்தவனுக்கு உதவுவதும் அவருடைய பேனாவின் சிறப்பு வறுமையுடன் போராடிய டாக்டர் வள்ளலாகவும் வாழ முடிந்தது



''கலைஞருள்கலைஞன்;மனிதருள் அதிமனிதன் என்று மதிக்கப்பட்ட டாக்டர் சாமுவேல் ஜோன்சன் தம்முடைய நாட்டுக்கும் தமது காலத்துக்கும் மட்டுமல்ல, எக்காலத்துக்கும் எந்த நாட்டுக்கும் உரிய சான்றேன்''

—ஜேம்ஸ் பொஸ்வெல்

## ஆங்கிலப் புலவர்கள் சரித்திரம்

''நுல்களைப்படித்து வாழ்க்கைவரலாறு எழுதமுயல்வது மூடச் செயல் ஒருவனின் நூல் நிலையம் முற்றுக எரிந்து சாம்பலானதற்கு அடுத்த நாள் அவர் எழுத ஆரம்பிக்கும் நூலே ஆசிரியனின் ஆளுமைக்கு அளவு கோலாகும்.

இக் கொள்கையை உறுதியாகக் வழ்நாள் முழுதும் கடைப்பிடித்த டாக்டர் தமது 71வது வயதில் எழுதிய கடைசி நூலும், அவருடைய மிகச் சிறந்த நூலுமான ''Lives of The Most Eminent English poets'' இக் கொள்கைக்கு சான்ருகின்றது. மனித சமுதாயத்தின் தலைவிதி மெய்ஞானம், வாழும் இலக்கியம், போலி விமர்சனம் புலமையின் இலக்கணம் போன்ற ஆழமான விசயங்கள் இந் நூலை அலங்கரிக்கின்றன.

## பிளீட் வீதி Fleet Street

பிறப்பிப்பயனை எய்திய பெருமை டாக்டருக்கு உண்டு என்பதை அவர் மறைந்து இன்று 200ஆண்டுகளுக்கு பின் உணர முடிகிறது.

அவர் வாழ்ந்த வண்ணமே தம்முடைய சொந்த பிளீட் வீதி வீட்டில் உயிர் நீத்தார். ஒருபாரிசவாத நோய் அவரை வருத்தியபோது தாம் பொது நலத்துக்கென்றுஒதுக்கிவைத்த பொருளை வைத்தியத்துக்குச் செலவிட விரும்பவில்லை, ஆனுல் வைத்திய நிபுணர்கள் தாராளமாக இலவச சேவை செய்தனர் இறைவனின் கருணை பற்றி பேசியவாறு நண்பர்கள் படுக்கையைச் சுற்றிநிற்க 1784 டிசம்பர் 13ல் இறைவனடி சேர்ந்தார். ஒரு வாரத்தின் பின் அவருடைய பூதஉடல் வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத்தில் Poet's Corner என்ற பிரிவில் சமாதிவைக்கப் பட்டது.

## மறக்க முடியாத அனுபவம்

ஐரோப்பிய பிரயாணம் ஒன்றில் நான் லண்டன் வந்தடைந்ததும் விஜயஞ் செய்த முதல் இடம் டாக்டரின் சமாதியே தம் வரலாற்றில் குறிப்பிட்ட புலவர்கள் மத்தியில் தாம் நடுநாயகமாக வீற்றிருக்கும்காட்சி கண்கொள்ளாக் காட்சி ஆகஸ்ட் 12 1958 என்னுடைய நான் குறிப்பில் ஒரு சிறந்த நாளாகக் காணப்படுகிறது. இதிலும் மிக உருக்கமான அனுபவமே 30ம் தேதி அவருடைய பிளீட் வீதி வீட்டில் நான் கண்டதும் கேட்டதும் இவ்விருசம்பவங்கள் அவருடைய நூல்களைப்படித்து அவரைப்பற்றிய நூல்களைப் படித்து அறிந்தவற்றிலும் மேலான நேரடிக்கருத்துப் பரிமாறுதல் உதவின. வாழ்க்கையில் மிக சிறந்த நாட்கள் இவையிரண்டுமென்பதே டாக்டருக்கு இன்று செலுத்தும் அஞ்சலி.

துன்பத்தில் தோய்ந்து வலிமைபெற்ற தூயமனிதன் ஜோன்சன். கும்பிக்கு சோறு போடவே அவர் நூல்கள் எழுதினுர். அதனுல் பலரைக்காப்பாற்றினுர். அப்பணியிலே செஞ்சொற்கவியியற்றிய கலைவாணரான உள்ளொளிவாய்ந்த உரவோராக உலகினர்க்கு போலியை அகற்றி உண்மையை உணர்த்தும் வகையில் அவர் வாழ்வே உலகுக்கு அவர் அளித்த அருஞ்செல்வம்.

காலத்தால் அவர் எழுதிய நூல்கள் வேறுபட்ட மதிப்புக்கு உரித்தாகலாம். 18ம் நூற்றுண்டில் எழுதப்பட்ட ஷேக்ஸ்பியர் விமர்சனங்களில் டாக்டருடையதே திறமானவை என்று இன்று கணிக்கப்படுகிறது. ஷேக்ஸ்பியர் இலக்கியத்தில் உன்னத இடம்பெறுகிறது.

## மாமனிதன்

அதென்னவானுலும் அவருடைய நூல்கள் அனைத்திலும் மேலானவரே அவற்றுள் மிளிரும் இந்த மாமனிதன். இதனுற்தான் Boswell's Life of Dr Samuel Johnson' என்ற நூல் ஆங்கில இலக்கியத்தின் முதல் வடியென மதிக்கப்படுகிறது.

திருக்குறளைப் படிக்கும்தோறும் வள்ளுவன் தன்னை உலகினுக்கே. தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு' என்கிறேம். ஆனுல் வள்ளுவர் யாரென்றறிவது நூலில் மூலம் என்ருலும் பெருமை குறளுக்கே! ஆனுல் ஜோன்சனின் நூல்களைப்படிக்கும் போது இவற்றை இயற்றிய மனிதனே இவற்றிலும் பெரியோன் என்ற உணர்வு மேலிடுகிறது.

உலகமகா கவியென மதிக்கப்படும் ஆங்கிலப்புலவர்களை இங்கிலாந்து பேணுவது போல் வேறெந்த நாடும் பேணுவதில்லை. ஆங்கில இலக்கியம் முன்னணி வகிப்பதில் என்ன வியப்பு?

சின்ன பொஸ்வெல்

# இவ்வாரம் எப்படி?

## இன்று

மாதம்- மார்கழி
திகதி- 15 [30-12-1984]
வாரம்- ஞாயிறு
திதி- அட்டமி பின் இரவு 12-58வரை
நக்ஷத்திரம்-உத்திரட்டாதி பிற்பகல்: 3-10வரை

### மேடம்

பணச்செலவு. ஏமாற்றம். சிறுபிரயாணம் உண்டு.மேலும் அன்னிய வாசம் அகால போசனம் தவிர்த்து நடக்கவும்.

### இடபம்

சகோதரப் பிணக்கும் சஞ்சலப்போக்கும் தொடரும் சிலருக்கு களஸ்திர சுகமுண்டு. சத்துருக்களின் சதிவேலையும் இருக்கும்

### மிதுனம்

திரைமறைவில் தில்லுமுல்லு இடம்பெறும் குடும்பத்தில் குதூகலம் தலைதூக்கும். தாய் வழியால் தனச்சிறப்புண்டு. தொழில் விடயத்தில் தொல்லைகள் உருவாகும்.

### கடகம்

புத்திரவழி மகிழ்ச்சி உண்டு. தொழில் நிலைமைகள் மந்தமாக இருக்கும். முயற்சியில் தடையேற்படும். அவதானம் வேண்டும்.

### சிங்கம்

தொட்டதெற்கெல்லாம் திட்டுக்கேட்பீர்கள். கொட்டமடக்க சிலர் திட்டம் தீட்டுவர் திடீர் காயங்களும் ஏற்படலாம். தெய்வசிந்தனையும் விழிப்புணர்வும் வேண்டும்.

### கன்னி

குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியைத் தரும். நீண்டநாள் திட்டமும் ஈடேறலாம். வீண்விடயத்தில் தலையிடுவதைத்தவிர்க்கவும்.

### துலாம்

சிறுவிபத்து ஏற்படலாம். வாய்வுக் கோளாறு சிறுபகையும் உண்டு. திடீர் வரவு திகைக்க வைக்கும்.

### விருச்சிகம்

ஆணவப் போக்கு இடர்களை உண்டு பண்ணும். உடல் நிலையில் பாதிப்பேற்படும். வியாபாரத்துறை வீழ்ச்சியைக் கொடுக்கும். பிதாவழியாலும் சிறுசச்சரவிற்கு இடமுண்டு.

### தனுசு

ஆத்திர பேச்சும் அவசரப் போக்கும் ஆபத்தை உருவாக்கும் எண்ணமெல்லாம் பாழாகும். கடன் தொல்லை மேலேங்கும். சிறுவரவுக்கு இடமுண்டு

### மகரம்

திடீர் பிரயாணத்திற்கு இடமுண்டு. உயர்மட்டத்து அன்பு கிட்டும். வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்,

### கும்பம்

தாய்வழி நன்மை கிட்டும். பெருமையின் நிழல்தொடரும். உதவி உபத்திரவமாகும். அரசபயம் அருகில் உண்டு.

### மீனம்

வாழ்க்கையில் புதிய நம்பிக்கை உதயமாகும். பிறர் ஆதரவு கிட்டும். தாய்வழி மூலம் நற்செய்தி கிடைக்கும். நிதானம் வேண்டும்.

திருமலை
க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சிறுகதை




ஒரு திங்கட்கிழமை. அது வங்கிக்கட்டிடம் வாடிக்கையாளரால் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. சோமு சவுதியிலிருந்து அனுப்பிவைத்த 'மெயில் ட்ரான்ஸ்பர் டிராப்ட்' டுடன் திறந்திருந்த ஒற்றைக் கதவினூடாக நெருக்கியடித்த வண்ணம் உள்ளே நுழைந்து, கவுண்டரில் வழமையான 'சம்பிரதாயங்களை' நிரப்பி முடித்துக் கொடுத்ததும் அந்தக் கவுண்டர் கிளார்க் தன் அருகிலிருந்த லேடி டைப்பிஸ்ட்டுடன் ஏதோ அறுவை ஜோக் அடித்தபடி அலட்சியமாக வீசியெறிந்த டோக்கனை லாவகமாக ஏந்திப் பிடித்த பின்தான் 'அப்பாடா' என்றிருந்தது.

''இப்ப யாழ்ப்பாணம் வந்து ஒரு அலுவலைப் பாத்துப் போட்டு நேர காலத்தோட ஊருக்குப் போறதெண்டது பெரிய விசயம் தான் சுப்பண்ணை''

என் அருகிலிருந்த யாரோ ஒரு செல்லத்துரை தன் அருகிலிருந்த சுப்பண்ணை என்கின்ற நபருக்குத் தனது அபிப்பிராயத்தை வலுக்கட்டாயமாகத் தெரிவித்துக்கொண்டிருந்தார் அவருக்கு 'நேர காலத்தோட' வீடு செல்ல வேண்டிய ஏதோ அவசியம் இருக்கவேண்டும். ம்... எனக்கென்ன அவசியம்? இருந்த அவசியம்தான் கடந்த நாலைந்து நாட்களுக்கு முன் போய்விட்டதே!

ஜானகி!

அவளுக்காகத்தானே இவ்வளவு காலமும் ஒபிஸ் முடிந்ததும் வீடொன்றும் வாசலென்றும் ஓடோடிச் சென்று வந்தேன். ஒரு ஐந்து நிமிடம் தாமதித்து விட்டாலும் ''அண்ணை ஏன் இன்னும் வரேல்லை'' என்று ஏங்கியபடி வீட்டு வாசலில் காத்திருப்பாள். போதாக் குறைக்கு அம்மாவேறு, ஆமிக்காரனைப் பற்றிஏதாவது சங்கதிசொல்லி வைத்திருப்பாள்.

''இண்டைக்குக் கொண்ணற்றை கச்சேரிப்பக்கம் ஏதோ ஆமிச் செக்கிங்காம் எண்டு கேள்வி',

சடாட்சரம் மாமா வைத்துவிட்டுப்போகும் 'வத்தி' ''கொண்ணரையும் ஆமி விசாரிக்கக் கொண்டு போயிருப்பாங்காளா'' என்று அனாவசியமான சந்தேகத்தை அம்மாவிடம் கொழுந்துவிட்டெரிய வைத்து, அதுவே ஜானகியை வீட்டு வாசல்வரை கொண்டு வந்து வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு காவல் இருக்க வைத்துவிடும்.

அந்த ஜானகி இன்று எம் வசம் இல்லை! என்னை மறந்து தன் தாயை மறந்து தொலை தூரத்திலிருந்து தன் அன்பையும், பாசத்தையும் 'ரியால்' களாக அனுப்பி வரும் சோமு அண்ணனையும் மறந்து ஓடிச் சென்றுவிட்டாள்-

அவள் மட்டும் தனியாகவா சென்றாள்? வீட்டின் அமைதி, எனது நிம்மதி இரண்டையும் அல்லவா எடுத்துச் சென்றுவிட்டாள்.

இன்று இந்தக்கணம் கையில் டோக்கனுடன் [நம்பர் இருபத்தியேழு] குந்திக்கொண்டிருக்கும் நான் இனி யாருக்காக இந்த ரியால்களை மாற்ற வேண்டும்?

''அண்ணை! நான் இந்த மாதம் ஏஜன்சிக்காரன் அனுப்பும் குழுவில் எப்படியெண்டாலும் போய் ஆகவேண்டும். நீர் கச்சேரியில் வேலைசெய்து உழைக்கும் காசு மட்டும் ஜானகிக்குச் சீதனம் குடுக்கக் காணாது. நான்போய் எப்படியும் உழைத்துக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து அனுப்புகிறன். அதை ஜானகியின் பேரில போட்டு வையுங்கோ. முடிஞ்சால் பேந்து எங்கடை கந்த ரோடைக் காணியில் ஒருவீட்டையும் கட்டிப்போடலாம். அவளுக்கும் இருபத்திரண்டு வயசாகுது''.

சோமு எட்டு மாதங்களுக்கு முன்னர் சொன்ன வார்த்தைகள் இப்போது சினிமாவில் 'ரிவர்ஸ் சின்' போலத்தோன்றி மறைந்தது.

அவனுக்கும் ஜானகி போன சங்கதி இந்நேரம் தெரிந்திருக்கும். உடனடியாகவே அவனுக்கு அறிவித்து விட்டேன். பாவம் தங்கச்சியை நல்ல இடத்தில் கல்யாணம் செய்து வைப்பதற்காக இந்தஇருபத்தி நான்கு வயதில் அவன் எவ்வளவு பொறுப்புடன் செயல்பட்டிருக்கிறான்.

''டோக்கன் நம்பர் டுவெண்டி செவன்''

எங்கோ ஆழ்கிணற்றிலிருந்து ஒலித்த குரல் என்னை சுயநினைவுக்குக் கொண்டுவந்தது. அந்த கவுண்டர் கிளாக் தான் என் இலக்கத்தைக் கூப்பிடுகிறான். முகம்வலு சீரியசாக இருக்கிறது. அந்த லேடி டைப்பிஸ் இவனது அறுவை ஜோக்கை ரசிக்காமல் ஏதாவது 'சுடச் சுட' கூறிவைத்து இவனை அசடுவழிய வைத்திருக்கலாம். யார் கண்டது?

''பேயிங் கவுண்டர் முன்னுக்குப் போங்கள்''

அவன் கையில் திணித்த சிகப்பு ரசீதுத் துண்டுடன் பேயிங் கவுண்டரை'' நாடினேன். துரையப்பா ஸ்டேடியத்தின் பென்ஷன் கியூ போல இதுவும் நீண்டிருந்தது.

துண்டுடன்கியூவில்இணைந்து அதை மேலும் ''ஒரு அடி'' நீளமாக்கிக்கொண்டேன். சற்றைக்கெல்லாம் 'சுரண்டலை' உணர்ந்தேன். திரும்பினேன்.

''எப்படித்தம்பி ரமணன்! இண்டைக்குக் கச்சேரி லீவாக்கும்'' சுரண்டல் காரர் வேறு யாருமல்ல. நாதன் மாஸ்டர் என்று பெயர் பெற்ற எனது குடும்ப நண்பர்தான்.

''சோமுவின் செக் ஒன்று 'என்காஷ்' பண்ண வேண்டியிருந்தது. பாங்கும் பத்தோடகுளோஸ் பண்ணிடுவினம் எண்ட தால் ஒரு சோ[illegible] வந்தனான்.''

கதைக்குத் தற்காலிகமாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினேன்.

ஜானகி போனதிலிருந்து எனக்கு மற்றவர்களுடன் கதைக்கப்பிடிக்கவில்லை. எவரைச் சந்தித்தாலும் அந்தச் சங்கதிபற்றித்தான் கதை.

தெரியாததை தெரிந்து கொள்ள ஆசைப்படுவதிலும் தெரிந்துகொண்டவர்கள் அது தமக்குத் தெரியுமென்பதைத் தெரிவித்துத் தம் கெட்டித்தனத்தைத் தாமே மெச்சிக் கொள்வதிலும் அட... நம் ஊரவர்கள் தனி ரகம் தான் சார்...!

''டியூட்டரிக்குப் படிக்கப் போறனெண்டுட்டுப் போனவவாம் ஏன்!''

டியூட்டரி என்ற வார்த்தையை சற்று அழுத்தமாக உச்சரித்து நாதன் மாஸ்டர் அடுத்த பாணத்தை தொடுத்விட்டார். அவருக்கு ஊர்வம் பென்றால் காணும். பத்திரிகையில் எங்காவது ஒரு மூலையில் ''காதலனுடன் கம்பிநீட்டினார்!'' என்று ஒரு சின்னச் செய்தி கிடந்தாலும் போதும் அதைவைத்து ஒரு காவியத்தையே படைத்துவிடும் அபார வளம்மிக்க ஆசாமி.

இன்றைக்கு இருமாதங்களுக்கு முன்னர் யாழ். பொது நூலகத்தில் வைத்துக்கதைத்த போது (சாட மாடயாக) ஜானகியின் காதல் விசயத்தை என்காதில் போட்டவர் நாதன் மாஸ்டர் தான்.

''தம்பி ரமணன் இப்ப நீர் தான் உம்மட குடும்பத்துக்கு பொறுப்பென்ற முறையில்உம்மட குடும்ப விசயம் ஒண்டு சொல்லுறன். உவள் ஜானகியைப்பத்தி ஒரு கதை உலாவுது.''

நாதன் மாஸ்டரின் பீடிகை என்னைத் திடுக்கிட வைத்தது. ஜானகியா?

''அவளுக்கு டியூட்டரி மாஸ்டர் பெடியன் ஒண்டோட தொடர்பாம். ஓடிப்போற அளவுக்கு வளரும் போல கதை அடியாப்பருவம் இப்பவே கண்டிச்சு வைக்க வேணும் இல்லாட்டில் குடும்ப மானம் போகும். நாட்செண்ட புண்ணைக் குணப்படுத்திறது கஸ்டம்.''

ஜானகிக்குக் காதல் கூட வருமா? என்ற சந்தேகம் என்னுள் மெல்லவாக எழுந்தது. ஆனால் அண்மைக் காலங்களில் அவளது நடையுடை பாவனைகளில் நான் அவதானித்து வந்த மாற்றம் அந்தச் சந்தேகத்தை வலுவாக்கத்திராணியற்று மடிந்து விட்டது.

என் மனதினுள்ளே மிக ஆழத்தில் அழகிய சிறு கோபுரமொன்று பொல பொல [illegible]

''இதை அம்மாவுக்குச் சொல்ல வேணும்'' என்ற மனதின் அவசரம், அவர் காட்டுக்கத்தல் கத்தி விசயத்தை பெரிது படுத்தி ஏடாகூடமாக்கி விடுவாள் என்ற பயம் மனதை நெருடும் போது அடங்கிவிடும். அதனால் மாஸ்டரின் ''கதை''யை மனதுக்குள்ளேயே மெல்லவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் வைத்துக் கொண்டிருந்தேன். முள்ளில் விழுந்த சேலையை நாசூக்காகத் தானே எடுக்க வேண்டும்? இன்று சேலை முள்ளில் மட்டுமா விழுந்து கிடக்கிறது? ''கியு'' எறும்பு போல ஊர்ந்து கொண்டிருந்தது. இடையிடையே காசாளரின் கம்பிக் கூட்டுக்குள் நாசூக்காகச் சிகப்புத் துண்டுகளுடன் பின் கதவால் செல்லும் வங்கிக் குமாஸ்தாக்கள் பணத்துடன் வெளியே வந்து தமது நெருங்கிய நண்பர்களுக்கு உள் வீட்டு உதவிகள் செய்து, அவர்களைக்காக்க வைக்காமல் வந்தகையோடு அலுவலை முடித்துக் கொடுத்துத் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தார்கள்

ஒரு படியாக என் முறை காசாளரிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தேன் ''சில்'' லென்று வெளிக்காற்று. அந்தப் பதினொரு மணி வெய்யிலிலும் இதமாக இருந்தது.

வங்கி ''பார்க்கிங்''கில் விட்டிருந்த என் ஹொண்டாவை 'கிக்' கிக் கொண்டு கிளம்பினேன் மனம் நிலை கொள்ளாது அலைபாய்ந்தது. முன்பென்றால் அலுவல் முடிந்தால் ஹாண்டில் தன் பாட்டில் வீடு நோக்கித் திரும்பும். இன்று? வீட்டில் யார் இருக்கிறார்கள் என் வரவை எதிர்பார்த்து? இவ்வளவு கஷ்டப்பட்டு ஏன் இந்தப்பணத்தை மாற்றி எடுக்கின்றேன்.

முன்னர் அதற்கொரு நோக்கம் இருந்தது. ''தங்கச்சிக்கு நகை செய்ய வேணும், சின்னதாக ஒரு வீடு. இரண்டறையில் கட்டிப்போட வேணும். அமெரிக்கன் ஸ்டைல் வீடென்றால் சீட் கூரைபோட வேண்டும். ஆனால் சீட் கூரை போட்டால் சுகாதாரத்துக்குக் கேடாம் பேப்பரில் படித்தனான் ஓடுதான் போடவேணும் சோமு '' ஏரோகிராம் முழுக்கத் திட்டங்கள் தீட்டி அனுப்பியதில் இன்று எவ்வித அர்த்தமுமில்லை.

''உன் வீடும் வேண்டாம், நகையும் வேண்டாம் என்று விட்டு அவளேபோன பின்னர் இன்னும் ஏன் இந்தச் சேமிப்புக்கள்?

இன்று நான் ட்ரவுசர் பொக்கட்டினுள் திணித்துக்கொண்டிருக்கும் இந்த ரூபாக்களை ரியால்களாக பாங்கில் கட்டி ட்ராப் எடுத்து எனக்கு அனுப்பும்போது அவன்தான் நினைத்திருந்தானா.

மனம் சுற்றி சுற்றி ஒன்றையே வளைய வந்தது. டாமிட் மோட்டார் சைக்கிள் ஆஸ்பத்திரி வளைவில் திரும்பி மணிக்கூட்டுக் கோபுரம் பக்கமாக உருண்டது. ஐக்கியவியாபாரசங்கம் எரிந்து உருக்குலைந்து கிடக்கிறது, என் மனதைப் போல!

''மானும் ஓடி வரலாம், மா நதியும் ஓடி வரலாம்! மங்கை தனியே வரலாமா? தன்மானம் மறந்து ஓடி வரலாமா? சந்தித்தே நீர்க்கடையில் ஜேசுதாஸ் கரகரத்துக் கொண்டிருந்தார்.

அடச்ச! ரேடியோவின் பாட்டுக்கூடவாளன் 'மூட்'டை அவுட்டாக்கும் சக்தி பெற்று விட்டன.

அக்சிலரேட்டரை முறுக்கினேன். பாதைகள் ஹொண்டாவின் டயரினூடாக என் கால்களின் கீழாக நழுவி... நழுவிச் சென்றன.

லோங்டன் கோபுரத்தை வலம் வந்து முற்றவெளிப்பக்கம் திரும்ப - உறைத்தது. அட! கச்சேரிக் கெல்லோ போக வேண்டும் மனம்தடுமாறுகின்றது. வேலை என்ன வேலை!

(6ம் பக்கம் பார்க்க)

## திக்கற்றவன்

எனக்குரியதை
அன்பாகக் கேட்டேன்
முறைத்துப் பார்த்தான்
பண்பாகக் கேட்டேன்
உதைத்தான்
ஓடிச்சென்று
ஆலயத்தில் அழுதேன்
சுருவங்களை எடுத்தெறிந்து
பேயாட்டம் ஆடினான்
இருண்ட வானத்தை
அண்ணாந்து பார்த்து
கண்ணீரை உகுத்தேன்
வெள்ளியொன்றுமுளைத்தது

— கேசரி

## யாழ்ப்பாணம் சுற்றிப்பார்ப்போமா

(ஒரு கவிதை உரையாடல்: வெளிநாட்டு நிருபரும் உள்ளூர் வாசியும்)

வெ. நி: நடப்பவற்றை அறியவந்தேன் நகரைச்சுற்றிக் காட்டுவீரே?
உ. வா: நல்லது வாரும் என்னுடனே நடந்தே செல்வோம் நகருக்கு
வெ. நி: சுடுகாடெதற்கு நகருக்கு இவ்வளவு அண்மையில் இருக்கிறது?
உ. வா: சுடுகாடில்லை இவையெல்லாம் நகரின் சுற்றுப்புறங்கள் தாம்
வெ. நி: எங்கே போனீர் அதற்கிடையில் குரல்மட்டும் தான் கேட்கிறதே
உ. வா: தெருவில் கிடந்த குழி ஒன்றில் வீழ்ந்துவிட்டேன் ஒரு நிமிடம்
வெ. நி: வயோதிபர்கள் எதற்காக மழையில் மாநாடு நடத்துகின்றார்?
உ. வா; மாநாடேதும் அங்கில்லை உரிமை ஊதியம் பெறுகின்றார்.
வெ. நி: மக்கள் எல்லாம் எதற்காக மரங்களைக்கண்டே அஞ்சுகின்றார்?
உ. வா: பச்சைநிறத்தைக் கண்டுவிட்டால் பயம் கொள்வதிங்கே இயற்கை
வெ. நி: மகளிர் சிலபேர் எதற்காக குளித்த குறையில் செல்கின்றார்?
உ. வா: தெருவிலேயே குளிப்பதற்கு நகரில் இப்போ வகையுண்டு.
வெ. நி: காற்றுப்பலமாய் வீசுவதேன் சூறை மையம் கொண்டுளதோ?
உ. வா: நம் ஊர்ப்பெற்றோர் விடுகின்ற பெருமூச்சுகளின் கூட்டணியேயது.
வெ. நி: அழுகுரல் ஏதோ கேட்கிறதே?
உ. வா: வீதியில் மைந்தன் இறந்துவிட்டான் விதியை நினைத்து அழுகின்றார்.
வெ. நி: அருகிருக்கும் வீட்டில்கூட அழுகை ஒலி கேட்கிறதே?
உ வா: வீடியோப்படத்திினிலே கே. ஆர். விஜயாவின் அழுகை அது.

— சி. திருவாகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூம் பனிமலர்கள்

## 7

து. வைத்திலிங்கம்

வருடக்கணக்காக நீரை நோக்கி ஏங்கிப் பாளம்பாளமாய் வெடித்து நின்ற வயல் காடு பெருமழையினால் நிரம்பிக் குளிர்ந்தது.

இந்த மூன்றுமாதகால இடைவெளியில் பிரேமகாந்தனின் கார் கலாவைச் சுமந்து கொண்டு அந்தக் கடற்கரை ஓரவிடுதிக்குப் பலமுறைவந்து போய்விட்டது.

கார் வெறும் இயந்திரம்! அதற்கு மட்டும் உணர்வு இருக்குமாயின் அது தன்னைச் சுற்றி நடைபெறும் மனித வக்கிரங்களைப் பற்றிக் காவியமே எழுதியிருக்கும்.

கலா சிறுபெண் அல்ல. கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலும் படித்தவள். உத்தியோக வாழ்விலும் ஓராண்டைக் கழித்துவிட்டாள்-

'பெண் என்றால் அழகாய் இருக்க வேண்டும்; அந்த அழகைநோக்கி ஆண்கள் நாடி ஓடிவருவார்கள்'- இது அவள் இதயம் முழுவதும் வியாபித்து இருந்த உணர்வுக்கலவை!

''என்னடி கலா, கந்தோர் முழுக்க ஒரே கதையாய்க் கிடக்கு... நான் கனக்கக் கேள்விப் பட்டன்...என்னடி நடக்குது...?''

—ஒருநாள் மதிய இடைவேளையின் போது மிஸிஸ் சிவசம்பு மெதுவாகக் கேட்டாள்.

கலா மௌனமாக இருந்தாள்.

''நேற்றுமடி நான் முன் கேற்றாலை வாறன், இவங்கள் ஜீப் டிறைவர்மார் இரண்டு மூண்டுபேர், வேறையும்ஆரோ நிண்டுகொண்டு கதைக்கிறாங்கள்! எனக்குக் கேட்கட்டும் எண்டுதான் கதைச்சமாதிரிக் கிடக்கு...''

''என்ன கதைச்சவங்கள்?''

''என்ன கதைச்சவங்களோ ...நீ கேட்டிருந்தால் செருப்பைக் கழட்டிக் கொடுத்திருப்பாய்''.

''ஓ! நான் ஏடியோடை திரியிறன் எண்டு கதைச்சிருப்பினம்...அதுதானே...''-அலட்சியமாக வெளிவந்தது கலாவின் வார்த்தைகள்.

''என்ன கலா, பயமில்லாமல் கதைக்கிறாய்...''

''என்ன பயம் ராஜேஸ்... நான் ஏடியை விரும்புறன்... அவரும் விரும்புறார்: அதுக்கு மற்றவை ஏன் அழவேணும்...''

''கலா, அப்படி எண்டால், நீ மற்றவையைப் பற்றிக் கவலைப்படவில்லையோ...''

''ராஜேஸ், நான் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை! நான் சின்னப்பிள்ளை இல்லை... எனக்கும் வயது முப்பத்திரண்டாகப் போகுது... எனக்கும் உலகம் விளங்கும்!

மிஸிஸ் சிவசம்பு பதில் கூறாமல் கலாவின் முகத்தையே பார்த்துக்கொண்டுஇருந்தாள்.

''எண்டாலும் கலா, நீ கோவிக்காதை... எனக்கும் மனம் தாங்காமல்தான் நான் கதைக்கிறன் ... ஏடி உன்னை ஏமாத்தினால்...''

''ராஜேஸ், அதுகளைப்பற்றி நான் இப்ப கவலைப்படவில்லை, அவர் என்னைச் சரியாய் விரும்பித்தான்...நான்..

''சரி அப்படியே வைச்சுக்கொள்! அவரைப் பற்றி விசாரிச்சுப் பாத்தனியே?''

''ராஜேஸ், நாங்கள் இப்ப இந்தக் கதையை விடுவம்... ஆறுதலாய்க் கதைப்பம்''.

இருந்தாற்போல் உரையாடலைக் கத்திரிகொண்டு வெட்டினாற்போல் கூறிவிட்டு எழுந்து விட்டாள் கலா.

உண்மைதான்! உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூட முடியாது என்று சொல்லுவதில் பொய்யில்லை. ஓர் இளம் பெண், அழகி காதல் வசப்பட்டுத் தன் மனதுக்கு இனியவனுடன் கதைத்தால், வெளியே போனால் அதைப்பற்றி உன்னிப்பாகக் கவனித்து சுவாரஸ்யமாக விமர்சிப்பதற்கு எங்கும் ஒரு கூட்டம் எப்பவும் இருக்கத்தான் செய்யும், அதுவும் உத்தியோகம் பார்க்கும் பெண் என்றால் விமர்சனங்களுக்கு எல்லையிராது! கலாவின் கதையும் பரவலாக அடிபட்டதில் வியப்பில்லை.

எந்த ஒரு அலுவலகத்திலும் அலுவலகம் தொடங்குமுன், வேலைக்கு வந்தவர்கள் வம்பளப்பதில் ஈடுபடுவது யாவருமறிந்த உண்மை. சதா பைல்களுடன் மாரடிக்க அவர்கள் இயந்திரமல்லவே? அலுவலகச் சிற்றூழியர்கள் - அதிகாரிகள் இலிகிதர்கள் என்று இதற்கு விதிவிலக்கில்லை! இன்றைய உலகில் காலையில் எழுந்து மாலைவரை கதைப்பதற்குத் தீனிபோட, பலவிதங்களிலும் சுவையான நிகழ்ச்சிகள் நடக்கின்றனவே!

செயலகத்தின் காவலாளிக்கு ஓர் ஒதுக்கப்புறமாக இடம் ஒதுக்கியிருந்ததால் அவன் மட்டும் இதில் விலக்காயிருந்தான்.

காலையில் வேலைக்கு வந்த கோபாலு, 'இன்குயரி' மூர்த்தி ஜீப் சாரதி துரைராஜா, பைண்டர் டானியல் கன்ரீனில் ஒரு ரீ குடித்துவிட்டு, வம்பளந்து கொண்டிருந்தனர்.

''என்ன கோபாலு, உங்கடை செக்ஷனில் கெதியிலை கலியாணம் நடக்கப் போகுதோ...'' - துரைராஜா கோபாலுவை நோக்கிக் கேட்டான்.

''என்ன கருமமோ தெரியாது அண்ணை, விஷயம் முத்திக் கொண்டு போகுது...!''

''என்னடாப்பா, புதுக் கதையாய்க்கிடக்கு ... என்ன சங்கதி...''-'இன்குயரி'மூர்த்தி கேட்டார்.

''என்ன அண்ணை விஷயம் தெரியாதமாதிரிக் கதைக்கிறியள்...! டி ஓ மிஸ் சின்னத்தம்பி...''

''அட அதையே கதைக்கிறியள்? அதுதான் இரண்டு பேரும் புருஷன் பெண்சாதி மாதிரிக்காரிலை ஒண்டாய்த்திரியினம்! எங்கயடா தம்பி காரிலை கொண்டு போறவன்?''

''உதுக்கே இடமில்லை...? எங்கடை லியோன் முனையிலை நடத்துறான் ஒருஹோட்டல்... அங்கை வேலை செய்யிற பெடியனைக் கேட்கவேணும் இவையின்ரை கேட்டையளை...!''

துரைராசா கண்ணைச்சிமிட்டியபடி சிரித்தான்.

''முனைரோட்டிலை கிடக்கிற ஹோட்டல் இவன் லியோன்ரையே ... அப்ப இவளுக்கென்ன இனிக்கலியாணம்...:'' -மூர்த்தி அணைந்த சுருட்டை மறுபடியும் பற்றவைத்துக் கொண்டே கேட்டார்.

''கலியாணம் என்னத்துக்கு இனி... என்னகோபாலு பேசாமல் இருக்கிறாய் ?'' துரைராஜா இக்கதைகளைத் திறந்தவாய் மூடாது கேட்டுக் கொண்டு நிற்கும் கோபாலுவை வம்புக்கு இழுத்தான்.

''அண்ணை அவளின்ரை கதையை விடுங்கோ... சரியான கெப்பர் பிடிச்சவள்...''

''டேய், டேய்...; உனக்கு அவளிலை ஏன் கோபம் எண்டு எனக்குத் தெரியும்... சொல்லட்டோ...''

''உதென்னபுதுக்கதை... வாயிலிருந்து சுருட்டை எடுத்து எச்சிலை உமிழ்ந்து விட்டுப் பழையபடி சுருட்டை வாயில் வைத்து இழுத்தார் மூர்த்தி.

''அதொண்டுமில்லை அண்ணை துரைராசா அண்ணை சும்மா முஸ்பாத்தி பண்ணுறார்...'' - கோபாலு சமாளித்தான்.

''சரி சரி அதை விடு...! நாங்கள் விஷயத்துக்கு வருவம். பெட்டையின்ரை தாய் தகப்பனுக்கும் இதுகள் தெரியாதோ...?'', சுருட்டை எறிந்து விட்டு மூர்த்தி தொடர்ந்தார்.

''டிஓவுக்குத் தகப்பன் இல்லை... இனி தாய் தானே...!''

''இதுதான் சொல்றது. ஆம்பிளையளுக்கு காரும் கூடாது. பெம்பிளையளுக்கு உத்தியோகமும் கூடாது...!'' சிரித்தபடி கூறினார் மூர்த்தி.

''நல்ல சோக்கான ஞாயம் சொல்லிறியள் அண்ணை...''- கோபாலு சிரித்தான்.

கொஞ்சம் பொறு போன மாதம். இஞ்சை இருந்து மாறிப்போன அந்த பி ஓ என்ன வேலை செய்தவன் எண்டு தெரியும் தானே...! மிஸ் முருகேசு ரைப் அடிச்சுக் கொண்டு இருக்கிறாள்... இவன் பாவி பிறத்தாலை போய் குஞ்சு கொஞ்சட்டே... எண்டு சொல்லி கையைப்பிடிக்க... அவள் அழ பேந்து என்ன நடந்ததெண்டு தெரியும் தானே. அவன் ஒண்டும் தெரியாதமாதிரி ஜெண்டில்மன் மாதிரித்திரிஞ்சான்! பெட்டை பாவம் ஒரு அப்பாவி... வேறை செக்ஷனுக்கு மாத்தி விட்டினம்...!''

''துரைராசா உது இப்ப நானும் பாக்கிறன் கொஞ்ச நாளாய் இது ஒரு வியாதி. இவங்கள் விடாங்கள் பெட்டையளை வேலை செய்ய...! உனக்குத் தெரியும்தானே.. இப்ப பத்து வருஷத்துக்கு முந்தி... ஒரு பெரியவன் இஞ்சை மூண்டு வருஷம் வேலை செய்தவன் மூண்டு வருஷம்செய்த வேலையள்...!''

மூர்த்தி கூறினார்.

''இவளவை ஒருத்தியையும் நான் நம்பமாட்டன்...!'' துரைராஜா ஆக்ரோஷமாய் கூறினான்.

''துரைராசா அவளவையைக் குற்றம் சொல்லிப்பலனில்லை, உத்தியோகத்துக்கு வாற பெட்டையள் எல்லாரும் அப்பிடியெண்டு சொல்லாதை. இவங்கள் தங்கடை உத்தியோகத்தையும் பவரையும் காட்டி இந்த அநியாயங்களைச் செய்யிறாங்கள்.

''என்னவோ நீங்கள் சொல்லுங்கோ... அது சரி இவன் கோபாலுவுக்கு ஒரு கலியாணம் கெதியிலை செய்துவைக்க வேணுமண்ணை!''

''இவனுக்கோ... இவன்ரை வயதுக்கு இனி பொம்பிளை தேடவல்லோ வேணும்...!''

எல்லோரும் சேர்ந்து சிரித்துக்கொண்டிருக்க இருந்தாற்போல் செயலக அதிபரின் பச்சை நிறக்கார் ரதும் வருவது போல் மெல்ல ஊர்ந்து வந்தது முன்வாசலால்.

காருக்குப் பின்னால் மிஸ் சிவசம்பு விரித்த குடையுடன் நடந்து வந்தாள்.

வம்பர் சபை கலைந்தது!

(வளரும்)

---

ஒருவர்: என்ன, நன்றி சொல்லிமுடித்த பிறகும் ஆட்கள் அப்படியே இருக்கிறார்களே?

மற்றவர்: இனித்தான் பிரசாதம் வழங்கல் இடம் பெறும்.

—கேசரி

---

# சிறப்புமிகு சில தமிழ் நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும் பெயர்களும்

[1] திருக்குறள்— திருவள்ளுவர்
[2] சிலப்பதிகாரம்— இளங்கோவடிகள்
[3] மணிமேகலை— கூலவாணிகன்- சாத்தனார்
[4] சீவகசிந்தாமணி— திருத்தக்கதேவர்
[5] குண்டலகேசி— நாதகுத்தனார்
[6] மகாபாரதம் (தமிழ்) ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வார்
[7] இராமாயணம்— கம்பர்
[8] தேம்பாவணி— வீரமாமுனிவர்
[9] முகையதீன் புராணம் வண்ணக் களஞ்சியர்
[10] திருவாசகம்— மாணிக்கவாசகர்
[11] திருப்பாவை— ஸ்ரீ ஆண்டாள்
[12] திருப்புகழ்— அருணகிரிநாதர்
[13] திருமுருகாற்றுப்படை நக்கீரர்
[14] தண்டியலங்காரம் — தண்டி
[15] கலிங்கத்துப்பரணி — சயங்கொண்டான்
16] கந்தபுராணம்— கச்சியப்பசிவாச்சாரியார்
[17] பெரியபுராணம்— சேக்கிழார்
[18] நன்னூல்— பவணந்தி முனிவர்
[19] நளவெண்பா— புகழேந்திப்புலவர்
[20] சூளாமணி— தோலாமொழித் தேவர்
[21] திருமந்திரம்— திருமூலர்
[22] தக்கயாகப்பரணி— ஒட்டக்கூத்தர்
[23] நல்வழி, மூதுரை — ஔவையார்
[24] யாழ்நூல்— விபுலானந்த அடிகள்
[25] பிரதாப முதலியார் சரிதம்— வேதநாயகம் பிள்ளை

வான்மதி சண்முகலிங்கம்

---

# அம்மா நீ அழாதே!

உன் கூனல் முதுகினைச்
சேலை மறைத்தாலும்,
குழி விழுந்த கண்களை
இமைகள் மறைத்தாலும்
அங்கே கரையோரம்
அலைமோதும் கண்ணீரை
எது மறைக்கும்?

வென்றிட முடியா விதியில்
பெற்றுவிட்டாய் பத்துயிரை
வதிநொந்து நாமே அழவில்லை
பின்—
ஏன் அழுதாய் நீ அம்மா?

பெண் நீ! பெற்றுவிட்ட
பெண்களுக்காய் அழுதாலும்
உன்னுடன் சேர்ந்தழ
கோழைகளா நாம் அம்மா?

சீதனச் சந்தையிலே
விலையில்லாச் சரக்காய்
நாமிருக்க
அந்த
இயலாமையின் ஏக்கத்திலா
அம்மா நீ அழுகின்றாய்?

பெண்களாய் எமைப்பெற்று
கரைசேர்க்க நீ துடிக்க
உன் துடிப்பறியா ஊராரின்
நடிப்பறிந்தா-நீ அழுதாய்?

மூப்பேறி எம் தலையில்
நரை சிரித்தாலும்
சீதனப் பேய் இருக்கும் வரை
நாம் போகோம்
நிலையில்லாச் சுகம்தேடி!
பின்—
ஏனம்மா அழுதாய் நீ?

—வவனியூர்
இரா. உதயணன்

---

# கலைஞர்கள் ஓய்வு பெறுவதில்லை

இந்த நூற்றாண்டின் சிறந்த சிற்பிகளில்ஒருவரான 86வயதுடைய ஹென்றி மோர் என்பவரிடம் 'தாங்கள் இந்த வேலையிலிருந்து எப்பொழுது ஓய்வெடுத்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளீர்கள்? எனக் கேட்டபோது ''கலைஞர்கள் ஓய்வெடுப்பதா?'' எனத்திருப்பிக் கேட்டுவிட்டு ''எந்த ஒரு கலைஞனும் ஓய்வெடுத்துக்கொள்வதில்லை'' எனப்பதில் கூறினார்.

''வயது அனுபவம் கலைத்துறையில் புதியதோர் செம்மையை மெருகை கொடுக்கின்றது. இது ஒரு புதிய உற்சாகத்தையும் கூட தருகின்றது'' எனத் தொடர்ந்து கூறிய மோர் இது பற்றி பின்வருமாறு விபரித்தார்.

''காலனின் கைப்பிடியில்சிக்கிய இறுதி நாள்வரை றெம்பிராண்ட் என்ற சிறந்த ஓவியர் தமது ஓவியக்கலையிலிருந்து ஓய்வெடுத்துக்கொள்ளவில்லை.

இதேபோன்றுதான் மைக்கேல் அஞ்சலோவும் ஓய்வெடுத்துக்கொள்ளவில்லை. சித்திரக் கலையில் புதுமைப் புரட்சி செய்த பிக்காஸோவும் இவ்வாறே இறுதிவரை ஓவியம் தீட்டிப் புகழ் நாட்டினார்.

கலைஞன் எப்படி ஓய்வெடுப்பது?

கவிஞன் எப்படி ஓய்வெடுத்துக்கொள்ளவில்லையா என்று கேட்கமுடியுமா?

கவிஞன் ஒருவன் புதிதாகக் கவிதைகள் எழுதாமலிருக்கலாம். ஆனால் மனித வாழ்க்கை பற்றிய அவனது மனதில் எழும் கற்பனை வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டே இருக்கும். அவனது கவித்துவச் சிந்தனைகள் ஓய்வெடுத்துக் கொள்வதேயில்லை.

—றீடர்ஸ் டைஜட்டிலிருந்து

—கணேஷ்

---

ஒருவர்: முந்தியெல்லாம் கிளித்தட்டு ஆடும்போது கிளிக்கு நிற்பாய்-இப்போ என்ன செய்கிறாய்?

மற்றவர்: கிளிச் சோதிடம் பார்க்கிறன்.

—கேசரி

---

# சிறுகதை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தடுமாற்றத்தின் போது நழுவிய அக்சிலேட்டரை மீண்டும் முறுக்கினேன்.

வீட்டுவாசலில் ஹொண்டா பெருமூச்சுடன் நின்றது. வாசலில் அவை என்ன? நாலைந்து சோடிச்செருப்புகள்! பல நிறங்களில் யார் வந்திருப்பார்கள்?

மெதுவாக உள்ளே எட்டிப் பார்த்தேன், ஓ!...பெரியம்மா! துக்கம் விசாரிக்க வந்திருக்கிறார்.

''நான் நினைச்சனே அக்கா! பெட்டை டியூட்டரிக்குப் போட்டு வாரன் எண்டுபோட்டுப் போனவள் போனவள் தான்!

துக்கத்தை அடக்க முடியாத சில நிமிடநேரங்கள் விம்மலில் கரைந்தன. அம்மாவின் அனுக்கமான குரல் மீண்டும் ஒலித்தது.


''ராசநாயகின்ர மோள் தான் வந்து சொன்னாள். மினிபஸ் அடிச்சு என்ற குஞ்சு ..'' அம்மாவினால் வசனத்தை முடிக்க முடியவில்லை.

நான் அறைக்குள் நுழைந்து கட்டிலில் சாய்கிறேன்.

[யாவும் கற்பனை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைநாடகம்



# தருமத்தின் குரல்

காரை.செ.சுந்தரம்பிள்ளை

## காட்சி 4

(களம் 2)

இடம்: அக்கிரனின் அந்தரங்க அறை
நேரம்; காலை
பாத்திரங்கள்: ஆத்தூர் அரசன் அக்கிரன் மந்திரி I மந்திரி I மந்திரி III

அக்கிரன்;

கத்தியை வீசிய கயவன் யாரோ
புத்தி யில்லாத புல்லனே! நேராக
வந்துநில் உந்தன் வாளுளை ஒட்டுவேன்
எந்தனைப் பற்றி யாதுநீ எண்ணினாய்
(சேவகரை விளித்து)
காவல் புரிகின்ற கயவரே வாரீர்
தேவையில்லாதவர் காவலை மீறிட
கண்ணு துயின்றீர் கலைத்துப் பிடியுமின்

மதனன்;

மன்னா கத்தியில் ஓலையொன்றுள்ளது

அக்கிரன்;

எடுத்து வாசியும் என்ன உள்ளது

மதன்:

கெடுமதி படைத்தோய்!

அக்கிரன்:

...........என்னடா கூறினாய்

மதன்:

இப்படி ஓலையில் இருக்குது மன்னவா

அக்கிரன்:

அப்படியா நீ செப்புக மற்றதை
(மதனன் எழுந்து வாசிக்கின்றான்)

மதனன்:

மக்களை மந்தையாய் மதிக்கும் மன்னா
திக்கற் றவராய்ச் செய்தலைத் தாட்டும்
கொடியவ னேயுன் கோல்துறந் திடுவாய்
குடிகளுக்குரிய விடுதலை தந்து
குடியர சோச்ச முடிதுறந் திடுவாய்
இரண்டொரு நாட்களில் இதைச்செய் யாவிடில்
திரண்டெழும் புரட்சித் தீஅதை அணைக்க
இயலா தென்பதை இன்றே அறிவாய்
துயரைக் களையத் துயிலெழுந் திட்ட
தக்க இந்நாட்டின் சார்பில் கூறும்
மக்கள் தொண்டன் உனக்கெம கண்டன்

வேறு

அக்கிரன்:

சிங்கத்தின் குகையில் வந்து
சிறுநரி புகுதல் போல
இங்கெந்தன் அரண்ம னைக்குள்
இவன்வர நியாய மாமோ
தங்குமிக் கோட்டை முற்றும்
சரியாகக் காவல் செய்க
எங்குமே உசாராய்ச் சேனை
இருந்திடப் பணிப்பீர் இன்றே
அக்கிரன் ஆட்சி பற்றி
அறிந்திலார் போலும் தீயில்
சிக்கிய விட்டில் போலும்
சிலந்தி வாய்ப் பூச்சி போலும்
கொக்கின் வாய் மீனைப் போலும்
கொல் உலை நீரைப் போலும்
உக்கிய வேலி போலும்
உயிர் பெறார்; அழிந்து போவர்

(அப்பொழுது பிறிதொரு கத்தி வீசப் பட்டு வந்து விழுகிறது)

மீண்டு மோர் கத்தி வந்து
வீழ்ந்தது; பகைவர் இன்னும்
ஈண்டுதா னுள்ளார் தேடி
எத்தரைப் பிடித்து வாரும்

மதனன்

கத்தி யோடோலை யொன்றும்
காணுது வேந்தே

அக்கிரன்;

...........ஆமாம்
சத்தம் போடாமல் வாசி
சங்கதி என்ன பார்ப்போம்
(மதனன் எழுந்து வாசிக்கிறான்)

மதனன்;

ஈனனே! இறுதியாய் நாம்
எச்சரிக் கின்றோம் நாளை
யானை வாய் கரும்பு போலும்
யமனின் வாய் உயிரைப் போலும்
பூனைவாய் எலியைப் போலும்
புலியின் வாய் மானைப் போலும்
வீணனே சிக்கி வீணாய்
வீழ்ந்தழி வெய்தப் போறாய்

அக்கிரன்:

அருகிலே தானுள் ளார்கள்
அயோக்கியர்; கவனம் ஓடித்
தெருவெலாம் பாரும் வந்து
சிக்கினால் விடாதீர்; என்றும்
உருவியே வாள்வேல் ஈட்டி
உகந்த கட்டாரி யோடு
கருமமே கண்ணாய் நில்லும்
கட்டளை தவற வேண்டாம்

ஒளி மங்குகிறது. இருள் மெல்லச் சூழ்கிறது. (மூன்றும் முறையும் ஒரு கத்தி ஓலையுடன் வந்து விழுகிறது. ஒளி தோன்றுகிறது. அதை இவனே எடுத்து வாசிக்கிறான்).

செல்வியைச் சிறையே செய்து
திருமணம் செய்ய எண்ணும்
புல்லனே! அதற்குப் புத்தி
புகட்டிய புழுவே! உங்கள்
வல்லமை போதும்; ஈட்டி
வாளினை வீசும்; நாளை
இல்லையும் ஆட்சி மக்கள்
எழுச்சியே வாகை சூடும்

(இருவரும் அதிர்ந்து போய் நிற்கின்றனர். படைகள் வரும் ஓசை கேட்கிறது. இருவரும் வாளை உருவுவதற்குள் அக்கிரனின் படை வீரர்களே அக்கிரனுக்கும் மதனனுக்கும் விலங்கிடுகின்றனர்கள்)

அக்கிரன்:

என்உப்பைத் தின்ற நீரா
இப்படிச் செய்கின் றீர்?
நன்றி யில்லாத நாய்கள்
நாட்டினப் பற்றில் லாத
கன்மனம் கொண்ட பேய்கள்
கயவர்கள்; உம்மை நம்பி
என்நிலை யிழந்து விட்டேன்
எவரைத்தான் நம்ப லாகும்!

சேனாதிபதி1

அக்கிரா அரசன் ஆணை
அதனாலே கைது செய்தோம்

அக்கிரன்;

வக்கிர புத்திக் காரா
வஞ்சகா அழிந்து போவாய்

சேனாதிபதி:

இக்கதி உன்னா லேதான்
ஏற்பட்ட தென்ப தோர்வாய்

அக்கிரன்:

அக்கதை எனக்கு வேண்டாம்
அநீதி யீதென்ப துண்மை

சேனாதிபதி;

நீதியைப் பற்றிப் பேச
நீயென்ன தருமனோ? வீண்
வாதென்ன வாளன் னோடு
வழங்குவன் மன்னன் நீதி

சேனாதிபதி காவலரை நோக்கி...

பாதித்த மக்க ளுக்கு
பறையறைந் திந்த உண்மை
ஓதுக. அக்கிரன் ஆட்சி
ஒழிந்த நற்செய்தி சொல்க

(திரை)

(வளரும்)

## கே. எஸ். சிவகுமாரன் எழுதுவது

# 'இஸம்'களின் தமிழ் விளக்கம்

நமது நாட்டிலே புதிய பரம்பரையினர் சிலர் துரதிஷ்டவசமாக ஆங்கில மொழியில் பரிச்சயம் செய்து கொண்டிருக்கவில்லை. விமர்சனம் அல்லது திறனாய்வுத் துறையிலே பயன்படுத்தப்படும் சிலபதங்கள் சில 'ஆழமுள்ள விமர்சகர்களுக்கு மலைப்பையே தந்தது. இந்த 'இஸம்'கள் பற்றி தமக்கு ஒன்றுமே தெரியாது. எனப் பகிரங்கமாகக் கூறியதுடன் ஏனையோர் ஆழமற்ற, மேலோட்டமான கட்டுரைகளையே எழுதுவதாகக் குற்றஞ் சாட்டினர். இத்தகைய விமர்சகர்கள் மீது பரிதாபப்படுவதுடன் அவர்கள் நலன்கருதி இந்த 'இஸம்' பற்றிய விளக்கத்தைத் தருவதே இப்பத்தியின் நோக்கம்.

நானாகத் தருவதைவிட்டு இந்த ஆழமுள்ள விமர்சகர்கள்' ஏற்றுக் கொள்ளக் கூடிய முற்போக்கு விமர்சகர்களின் வியாக்கியானங்களிலிருந்து தொகுத்துத் தருவது அவர்களுக்கேத் திருப்தி தரக்கூடும். எனவே 1972 ஆம் ஆண்டு வெளிவந்த மலர்-3, இதழ்-1 ''ஆராய்ச்சி'' ஏட்டில் இடம் பெற்ற ஒரு கட்டுரையிலிருந்து இந்த விளக்கத்தைப் பெற்றுக் கொள்வோம்:-

வெ. கிருஷ்ண மூர்த்தி என்பவர் எழுதிய ''கிருத்திகாவின் இரண்டு நாவல்கள்'' என்ற கட்டுரையிலிருந்து சில மேற்கோள்கள்:

ப்ரொய்டிஸம்: மூலப்பிதா சிக்மன்ட் ப்ரொய்ட் மனிதனுடைய உணர்வு பூர்வமான நடவடிக்கைகளை அவனது ''அன்கொன்ஷஸ்'' எனப்படும் ஆழ்உணர்வே நிர்ணயிக்கிறது. என்று கூறினார்.

மனித மனத்தின்அடிப்படை உணர்ச்சிகளாக இன்ப நாட்டமும் [லிபிடோ] இறப்பு மற்றும் அழிவு அச்சமும் உள்ளன இவ்விரண்டையும் சேர்த்து ''இட்'' என்று ப்ரொய்ட் அழைத்தார். இவை தவிர ''ஈகோ'' எனப்படும் உணர்வும் அவரால் குறிப்பிடப்பட்டது இது புறஉலகோடு மனிதனைத் தொடர்புபடுத்துவது, ''இட்'' ஆழ் மனதைச் சேர்ந்தது. அதுகொள்ளும் வேட்கை நிறைவேறச் சமூகக் கட்டுப்பாடுகள் தடையாக உள்ளன. இக் கட்டுப்பாடுகள் விலங்குகளுக்கு இல்லை. மனித சமுதாயத்தால் ''டபூ'' எனக்கருதப்படுபவை மனிதனது இன்ப நாட்டத்திற்குத் தடையாக இருக்கின்றன. அவனது வேட்கை தடுக்கப்படும் பொழுது ''கொன்ஷஸ்'' உணர்விலிருந்து ''அன்கொன்ஷஸ்'' நிலைக்கு அது சென்று விடுகிறது.

அடக்கப்பட்ட உணர்ச்சிக்கும் உணர்வு நிலைக்குமுள்ள முரண்பாட்டிற்கு ''கொம்பிளெக்ஸ்'' என்று பெயரிட்டு அவைகளில் பலவற்றைப் ரொய்ட் வகைப்படுத்திச் கூறினார். தன்னைத்தானே காதலிக்கும் ''நார்ஸிஸஸ் கொம்ப்ளெக்ஸ்'' தாய்மீது கொண்ட பரிவு மனத்தில் சரித்திரமாகப் பதிந்து நிற்கும் ''ஈடிப்பஸ் கொம்ப்ளெக்ஸ்'' பிறரைஅடக்கியாள என்னலாம் ''ஹேர்குலிஸ்கொம்ப்ளெக்ஸ் போன்ற சிக்கல்களை அவர் வகைப்படுத்திக் கூறினார்.

இக்கொள்கை தனிமனிதனின் செய்கைக்கு மட்டுமன்றி சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான செய்கைக்கும் விளக்கம் தரப்பயன்படுத்தப்பட்ட து. 'லிபிடோ' என்ற இணைவிழைச்சு, உணர்வு,வரலாறு, சமுதாயம், பண்பாடு, மக்கள் தொகை தவிர எல்லாவற்றிற்குமே பொருந்தும் என்றும் ப்ரொய்ட் எழுதினார்.

★

60களின் பிற்பகுதியில் கண்டியிலிருந்து ''செய்தி'' என்றொரு வாரப்பத்திரிகை வெளிவந்தது. அந்தப்பத்திரிகையிலே மறைந்த மு. தளையசிங்கம், காசிநாதன் ''பிரம்மஞானி'' என்ற ஸ்டனிஸ்லோ ஜோர்ஜ் சந்திரசேகரம், மறைந்த பெரி. சுந்தரலிங்கம், ரா. மு. நாகலிங்கம் போன்றவர்களும் நானும் எழுதிவந்தோம ப்ரொய்டிக் கோட்பாடுகளை ''பிரம்மஞானி'' அப்பொழுது அற்புதமாக விளக்கி நீண்ட கட்டுரைகளை எழுதிவந்தார். அக்கட்டுரைகளைப் படித்தாகுதல் ''இஸம்' பற்றி இந்த 'ஆழமுள்ள' விமர்சகர்கள் அறிந்திருக்கலாம். போகட்டும்.

குறிப்பிட்ட இந்த ''ஆராய்ச்சி'' இதழிலே ''கமலாம்பாள் சரித்திரம்'' சித்திராபார்த்த சாரதியின் படைப்புகளை நீல. பத்மநாபனின் நாவல்கள் கிருத்திகாவின் நாவல்களும் மீராயின் ''கதைகள் + கற்பனைகள் = காகிதங்கள் ஆகிய விஷயங்கள் பற்றிய ''ஆராய்ச்சிக் கட்டுரைகள்'' வெளிவந்துள்ளன. மிகவும் பயனுள்ள விளக்கங்கள் ஆசிரியர் நா. வானமாமலை தானும் தனது விளக்கத்தை ஒவ்வொரு கட்டுரைக்கும் எழுதியுள்ளார்; இவற்றை நா வானமாமலை, கா. சுப்பிரமணியன், எஸ். தோதாத்திரி, தி. க நடராஜன், பி எஸ் கே. பக்தவத்சலன், வெ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் எழுதியுள்ளனர். ''மாதவியும் வசந்தசேனையும்'', ''காவிரிப்பூம் பட்டினத்தில் புதைபொருள் ஆராய்ச்சி'' போன்றகட்டுரைகள் பல தகவல்களைத் தருகின்றன.

''ஆரியர்-திராவிடர்'' பற்றிய துநீதிகுமார் சட்டர்ஜி கட்டுரை, ''வரலாறும் வக்கிரங்களும்'' பற்றிய ரொமிலா தப்பாரின் கட்டுரை ஆகியன மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இவற்றுடன் சோவியத் ஆராய்ச்சிக் கழகங்களில் தமிழ் திராவிட மொழிகளின் ஆய்வுகள், மொஸ்கோவில் திருக்குறள் பற்றிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

ஆராய்ச்சி'' ஒரு சமூகவியல் பார்வையில் இலக்கியத்தை அணுக வழி சமைத்தது.


★

## எதனால்?

இனங்களிலும்
ஏற்றத்தாழ்வு
சில
மனங்களிலும்
ஏற்றத்தாழ்வு
நீதியிலும்
ஏற்றத்தாழ்வு
அதனால்
வீதியிலும்
ஏற்றத்தாழ்வு

— அ. தத்வசுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாள்ஸ் டிக்கின்ஸின்

# ஒலிவர் ருவிஸ்ற்

தமிழில்: 'பேனு'

## 6

பல நாட்கள் யூதக்கிழவன் பேஜின்னின் அறையிலேயே தங்கியிருந்து அவன் கூறியவாறு கைக்குட்டைகளிலுள்ள குறியீடுகளை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டு வந்தான் ஒலிவர். சிலசமயங்களில் பேஜின் நடத்திய முன் சொன்ன நாடகத்திலும் பங்கு கொண்டான். கடைசியில் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. வெளியில் சென்று தூயகாற்றை சுவாசிக்க வேண்டும் போலிருந்தது அதனுல் தன்னை வெளியில் சென்று மற்ற இரு சகாக்களைப் போல் வேலைசெய்ய அனுமதிக்கும்படி கிழவனிடம் கெஞ்சினுன் ஒலிவர்.

கடைசியாக ஒரு தினம் ஒலிவரின் கோரிக்கைக்கு இணங்கி மற்ற இரு பையன்களோடு வெளியில் செல்வதற்கு அனுமதியளித்தான் பேஜின்.

மூவரும் அன்றைய தொழிலுக்கென்று புறப்பட்டனர். முதலில் அவர்கள் மெதுவாக ஏனோதானோவென்று போய்க் கொண்டிருந்ததைப் பார்த்த ஒலிவர், அன்று தனது சகாக்கள் இருவரும் வேலைக்கே போவதில்லையென முடிவு செய்துவிட்டார்கள் போலிருக்கிறது என்று நினைத்தான். ஆனுல் ஒரு சிறு குறுகிய ஒழுங்கையை விட்டு அவர்கள் வெளியேறிய கையோடு ஸ்டாக்கின்ஸ்-திடீரென நின்று தனது சகாக்களை எச்சரிக்கையுடன் இழுத்து நிறுத்தினுன்.

### பழி ஓரிடம்

### பாவம் ஓரிடம்

''என்ன விஷயம்'' ஒலிவர் கேட்டான்.

''உஷ்... அந்த புத்தகக் கடையில் ஒரு கிழவன் நிற்கிறுன் தெரிகிறதா?'' என்றுன் ஸ்டாக்கின்ஸ்:

''ஒரு வயதான கனவான் வீதிக்கு அப்பால், ஆம், அவரை எனக்குத் தெரிகிறது'' என்றுன் ஒலிவர்.

''அவனைக் கவனிப்போம்'' என்றுன் ஸ்டாக்கின்ஸ்.

''நல்ல சந்தர்ப்பம்'' என்றுன் சார்லிபேட்ஸ்.

ஒலிவருக்குப் பெரும் ஆச்சரியம். இருவரையும் மாறி மாறிப் பார்த்தான். ஆனுல் விபரமாக ஒன்றும் புரிந்து கொள்ள முடியவில்லை ஏனென்றுல் சகாக்கள் இருவரும்மெதுவாக வீதியைக் கடந்து அந்த வயதான மனிதரைத் தொடர ஆரம்பித்தார்கள். அவர்களுக்குப் பின்னுல் சில அடிகள் ஒலிவர் நடந்தான். பிறகு முன்னே போவதா, அல்லது திரும்பி விடுவதா என்று தெரியாமல் அதே இடத்தில்நின்று பிரமையுடன்பார்த்துக்கொண்டிருந்தான்.

அந்த முதிய கனவான், மிகவும் கண்ணியமான மதிப்புக்குரியவர் போல் தோன்றியது. தலைநரைத்து தங்கச்சட்டம் போட்ட மூக்குக் கண்ணுடியுடன் காணப்பட்டார். புத்தகக் கடையில் ஒரு புத்தகத்தை எடுத்து விரித்து தமதுவீட்டில் இருப்பது போல் மிகக் கவனமாகப் படிக்க ஆரம்பித்து விட்டார் அந்த மனிதர்.

இந்தவேளையில் டொஜர் (ஸ்டாக்கின்ஸின் இன்னுெரு பெயர்) அந்த முதியவரின் பாக்கட்டுக்குள் கையை விட்டு ஒரு கைக்குட்டையை வெளியில் எடுத்தான். பின் அதனை சார்லிபேட்ஸிடம்கையளித்தான் கடைசியில் இருவரும் விரைந்து ஓட ஆரம்பித்தார்கள்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒலிவருக்கு திகை பிரமையாய்ப் போய்விட்டது மட்டுமல்ல, அந்த ஒரு கணத்தில் பேஜின் கிழவனின் கைக்குட்டைகள், கடிகாரங்கள், நகைகள் ஆகிய அனைத்தினதும் மர்மம் ஒலிவருக்கு துல்லியமாகப் புரிந்துவிட்டது. குழப்பமும் அதிர்ச்சியும் அவனை ஒரு விஞடி சிலையாய் நிறுத்தி விட்டபோதிலும் அடுத்த விஞடி தன்னுல் முடிந்தளவு வேகத்தில் ஓடத்தொடங்கி விட்டான் ஒலிவர். அதே சமயம் அந்த முதியவர் தமது சட்டைப் பைக்குள் கையை விட்டுத் துழாவிப் பார்த்தவர் முகத்தில் வியர்வை வழிந்த படியும் அந்தச் சிறுவன் ஓடிக் கொண்டிருந்தான்.

யாரோ ஒருவன் கொடுத்த ஒரு அடியில் பையன் வீதியின் ஓரத்திலுள்ள நடைபாதையில் விழுந்தான் சனக்கூட்டம் வேடிக்கை பார்ப்பதற்காக குழுமிவிட்டது.

''தள்ளி நில்லுங்கள்''

''அவனுக்கு காற்று வரட்டும் இடம் விடுங்கள்''

''பேக்கதை அவனுக்கு அது தேவையில்லை''

''இதோ வருகிறுர் அந்த முதியவர்''

''இவன்தானு அந்தப் பையன் ஐயா?''

''ஆம்''

புழுதியும் சேறும் உடம்பு முழுவதும் அப்பி வாயிலிருந்து இரத்தம் ஒழுகிய நிலையில் தன்னைச் சுற்றி நிற்பவர்களை வெறித்துப் பார்த்தபடி ஒலிவர் கிடந்தான்.



அடுத்தவாரம் ஒலிவர் மீண்டும் சிக்கிக்கொண்டார்

அங்கே கைக்குட்டையைக் காணுமல் திகைப்புடன் தலையைத் திருப்ப மிகவேகமாக ஓடிக்கொண்டிருக்கும் ஒலிவரைக் கண்டுவிட்டார். தமது சட்டைப் பையிலிருந்து அவன் தான் கைக்குட்டையைத் திருடியிருக்கிறுன் என்ற முடிவுக்கு வந்தவராய் ''நில்! திருடன்!!' என முழுமூச்சில் குரலெழுப்பியபடி அந்தப் புத்தகத்தையும் கையில் வைத்தபடி அவன் பின்னுலேயே ஓட ஆரம்பித்தார்

முதியவர் கத்திக்கொண்டே ஓடிவருவதையும், ஒலிவர் ஓடிக் கொண்டிருப்பதையும் கவனித்த டொஜரும், பேட்சும் நிலைமையைப் புரிந்து கொண்டுவிட்டவர்களாய் ஓட்டத்தை நிறுத்திவிட்டு நல்லவர்களைப்போல பாவனை செய்து ''திருடன் பிடி விடாதே'' என்றவாறு கத்தியபடி முதியவருடன் சேர்ந்து கொண்டு துரத்தலானுர்கள். இதைக்கண்ட வேறுபலரும் ''திருடன் திருடன்'' என்று கத்தியபடி ஒலிவரின் பின்னுல் ஓடிஞர்கள்.

அச்சமும் பயமும் மனதில் மேவிட மூச்சுத் திணறியபடி அந்த வேளையில் அம்முதியவரை யாரோ முன்னுக்குத் தள்ளி விட்டார்கள்.

''ஆம், இவன்தான் அந்தப் பையன். பாவம் காயப்பட்டுப் போனுன்'' என்று வருத்தப் பட்டார் முதியவர்.

''நான்தான் சேர் அதைச் செய்தேன். அவனை ஓடாமல் நிறுத்தினேன்'' என்று கூறியபடி ஒருவன் முன்னேவந்தான். முதியவர் ஏதாகிலும் சன்மானம் தருவார் என அவன் எதிர்பார்த்தான். ஆனுல் அந்த வயதான கனவான் அவனை வெறுப்புடன் நோக்கினுர். இதேவேளை பொலிஸ் அதிகாரி ஒருவர் சனக்கும்பலை விலக்கிக் கொண்டு ஒலிவரின் அருகில் வந்து அவனது சட்டைக்கழுத்தில் பிடித்து முரட்டுத்தனமாக இழுத்தபடி எழுந்துவா என்று மிரட்டினுர்.

''அது நான் இல்லை ஐயா? உண்மையாகவே நானில்லை. அதுவேறு இரண்டு பையன்கள்'' என்று ஒலிவர் கத்தினுன். கைகள் இரண்டையும் ஒன்றுகப் பிணைத்துக் கெஞ்சிய படி [illegible] தான். ''அவர்கள் இங்குதான் எங்காவது இருப்பார்கள்'' என்றுன்.

''இல்லை அவர்கள் இல்லை. நீ எழுந்திரு'' என்றுர்பொலிஸ் அதிகாரி.

''அவனை வருத்தவேண்டாம்'' என்று கவலையுடன் கேட்டுக்கொண்டார் அந்த வயதான மனிதர்.

''இல்லை, அவனை நான் வருத்தமாட்டேன்'' என்று கூறியபடி பொலிஸ் அதிகாரி ஒலிவர் அணிந்திருந்த சட்டையின் பாதியைக் கிழித்து விட்டான். ''வா, வா, உன்னை எனக்குத் தெரியும். பாசாங்கு செய்யாதே. அதெல்லாம் என்னிடம் நடக்காது. எழுந்து நில்லடாபேயா'' என்று கத்தினுன்.பொலிஸ்காரன்.

எழுந்திருக்கவும் முடியாதிருந்த அவனை கோட்கழுத்தில் பிடித்து வீதி வழியாக இழுத்துச் சென்றுன் பொலிஸ்காரன். அந்த முதியவரும் அவர்களுடனேயே சென்றுர். அந்த இரு திருட்டுப் பயல்களும் வெற்றிக்களிப்புடன் மெதுவாக நழுவி தங்களின் இடம்நோக்கிச் சென்றுர்கள்

ஒலிவரும் அந்த முதியவரும் நீதிபதி திரு. ஃபாங் என்பவரின் காரியாலயத்துக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். நுனிமூக்கில் கோபக்காரரான இந்த மனிதர் மிகவும் மரியாதைக்குறைவாக அந்த முதியவரை நடத்தினுர். அதனுல் கோபமுற்ற முதியவர் ஒலிவருக்கு ஏதும்கஷ்டம் அதிகரித்து விடலாகாதென்பதற்காகக் கோபத்தை அடக்கிக்கொண்டார். தமது பெயர் பிரவுண்லோ என்று கூறிய அம்முதியவர் தமது பொருட்கள் களவு போனது உண்மைதான் என்றும், ஆனுல் இந்தப்பையன் அவைகளை எடுப்பதைத் தாம் காணவில்லையென்றும், அவன் ஓடுவதைப் பார்த்ததும் அவன் பின்னுலேயே தாமும் ஓடியதாகவும் கூறிய முதியவர் பையனைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டாம் என்று நீதிபதியிடம் கெஞ்சிக்கேட்டுக் கொண்டார்.

''அவன் ஏற்கனவே அடிபட்டிருக்கிறுன். அவனுக்கு சுகமில்லைபோல் தெரிகிறது'' என்றும் கூறிமுடித்தார் அவர்.

'ஆம் ஆம்' என்றுர் நீதிபதி கிண்டலாக ''வா சின்ன ராஸ்கல் உன் தந்திரம் எல்லாம் இங்கு செல்லாது. உன் பேர் என்ன''என்று கேட்டார் ஒலிவரிடம்.

ஒலிவர் பதில்சொல்ல எத்தனித்தான். ஆனுல் அவனுல் பேசமுடியவில்லை. நாக்கு வறண்டுபோய்விட்டது. அந்த இடம் முழுவதுமே தலை கீழாய் சுற்றுவது போலிருந்தது அவனுக்கு.

பொலிஸ் அதிகாரி ஒலிவர் சார்பில் பதில் சொன்னுர். அவன் உண்மையிலேயே சுகவீன முற்றிருப்பதுபோல் தெரிகிறது என்றும் கூறினுர். இருந்தபோதிலும் ஒலிவருக்கு மூன்று மாதம் கடூழியச்சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துவிட்டார் நீதிபதி. ஒலிவரைச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகவிருந்த தறுவாயில்புத்தகசாலையின் உரிமையாளன் அவசரமாக அங்கே வந்து ''நிறுத்துங்கள் தயவு செய்து ஒருநிமிடம் நில்லுங்கள்'' என்று மன்றுடினுன்.

யார் இவன்? இவனை வெளியில் அனுப்பி காரியாலயத்தை காலி செய்யுங்கள்'' என்று கத்தினுர் ஃபாங்.

என்னைப்பேச விடுங்கள், நான் எல்லாவற்றையும் நேரில் பார்த்தேன்'' என்றுன் புத்தகசாலைக்காரன். புத்தகசாலையில் திரு. பிரவுண்லோ புத்தகம் படித்துக்கொண்டிருந்த போது மூன்று பையன்கள் வந்ததையும் அவர்களில் இருவர் பிரவுண்லோவின் பொருட்களை திருடியதையும்அதைப்பார்த்து ஒலிவர் திகைத்து நின்றதையும் தாம் கண்ணுல் கண்டவாறு அவன்எடுத்துக் கூறினுன்.

இதைக்கேட்டுக் கொண்டிருந்த நீதிபதி ஒலிவரை விடுதலை செய்யும்படி உத்தரவிட்டார்.

ஒரு குதிரை வண்டியை அழைத்து அதில் ஒரு ஆசனத்தில் ஒலிவரை மிகக்கவனமாக படுக்கவைத்து தாமும் அருகில் அமர்ந்து தமது வீட்டுக்குக் கொண்டுபோனுர் திரு. பிரவுண்லோ.

[தொடரும்]

## மழையிலே பென்சன்

மழையிலே பென்சன்! கால்கள்
'வானிலே' சறுக்க ஏறி
நுழையவே இடமும் இல்லை
நோக்கினுல் நரைத்தோர் கூட்டம்
தலையிலே முகடு தட்டச்
சரிந்திடக் குடைகள் குத்த
கலையிலே மூச்சு வாங்கக்
காசினைப் பெறுவோம் என்றே

குருநகர் அடைந்தால் வீதி
கொடிவிடும் 'பென்சன்' காரர்
பெருமழை கொட்டக் கையில்
பிடித்திடும் குடையோ சின்னன்
திருமதி சந்தை கொண்டு
திரிந்திடும் குடையால் தேகம்
வருமதி கேட்டு நிற்கும்
வாய்ப்பினை இழந்து ஏங்க

நல்லவர்க் காக இந்த
நாட்டிலே மழையும் பெய்யும்
சொல்லினை நினைந்து கொஞ்சத்
தூரத்தே நிமிர்ந்து பார்த்தால்
மெல்லவே துவக்கை நீட்டி
வீறுடன் நிற் கின்றுர்கள்
மல்லரைக் காணப் 'பென்சன்'
வாங்கவும் மனமே யின்றி

மானமாய் வாழ்ந்த வாழ்வை
வழிவழி வந்த பண்பை
ஞானமாய்ச் சேவை செய்த
நாட்களைப் பயனை எண்ணி
தானமாய்க் கேட்க வில்லைத்
தருமதி கேட்க வந்தால்
ஏனையா அரசே நீங்கள்
இப்படி வருத்த லாமோ

அட்டமி நவமி பார்த்து
அடுத்திடு வியாழன் பார்த்துக்
கிட்டடி இடத்தில் நாங்கள்
கேட்டதும் கிடைத்த பென்சன்
கொட்டிடு மழையில் பொல்லாக்
குளிரினில் வரிசை நின்று
மட்டிலாத் துயரி னோடு
வாங்கவும் கால மாச்சே!

-இளவாலை அமுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இந்திராவைக்கொன்றவர்கள் இரு பைத்தியக்காரர்கள்"

சீக்கிய சமூகத்துக்கும், இந்தியாவுக்கும்பெருமைசேர்க்கும் ஒருவராககோவா(Goa) மாநில ஆளுநர் டாக்டர் கோபால் சிங் விளங்குகிறார்.

இவர் ஒரு மிகவுயர்ந்த அரசாங்க நிர்வாகி மட்டுமல்ல சிறந்த இலக்கியவாதியும், நீண்டகால ராஜதந்திரியுமாவார்.

டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் இவரது இலக்கியப் படைப்பொன்றை 'நோபல்' (Nobel) பரிசுக்கு

''இந்திராகாந்தியைப் படுகொலைசெய்தவர்கள் சீக்கிய சமூகத்துக்கு மாசு கற்பிக்கும் இருபைத்தியக்காரர்கள். இதற்காக அனைத்து சீக்கிய சமூகம் மீதும் பழியைச் சுமத்துவது கவலைக் குரியதாகும்'' என்கிறார் இவர்.

அவர் தொடர்ந்து கூறுவது: ''தியாகம், பராக்கிரமம், என்பவற்றில் சீக்கிய சமூகத்துக்கு நீண்ட வரலாற்று ரீதியான பாரம்பரியம் உண்டு.''

பல்வேறு இலக்கியத் துறை ஆர்வலர்கள் இந்த நூல்ப்பணியைப் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

ஜேசுகிறிஸ்த்துவைப் பற்றியும் இவர் ஒரு கவிதைத் தொகுப்பொன்றை வெளியிட்டுள்ளார். 'இறவாத மனிதர்' என்பது அதன் பெயராகும். இக் கவிதைத் தொகுப்பு நூலை ஆருவது பாப்பரசர் வத்திக்கானில் வைத்து புகழ்ந்தார். அத்துடன் வத்திக்கான் வானொலியும் இந் நூலின் கவிதைகளை ஒலிபரப்பியது.

## மகாத்மாவைச் சுட்டவனை இந்து என்பதா?

## சாம்பல் பள்ளத்தாக்கு கொள்ளையர்களையும் இந்துக்கள் என்பதா?



டாக்டர் கோபால்சிங்

சிபார்சு செய்யுமளவிற்கு சீக்கிய- ஆங்கில இலக்கியங்களைப் பெருமளவில் இவர் படைத்துள்ளார்.

கடந்த ஆண்டு உலக இஸ்லாமிய மகாநாட்டில் இஸ்லாமியரல்லாத இருவருக்கு அதில் சொற்பொழிவாற்றும் கௌரவம் வழங்கப்பட்டது. அதில் ஒருவர் டாக்டர் கோபால்சிங், மற்றவர் மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி என்பது குறிப்பிடத்தக்கது.

'திருமதி காந்தியைக் கொலை செய்தவர்கள் பைத்தியக்காரர்கள். அவர்களுக்கு இந்திய

### மனிதாபிமானம் கொண்டவர்கள்

சீக்கியர்கள் மனிதாபிமானம்கொண்டவர்கள். அவர்களில் ஒரு சிறியபிரிவினரே வன்முறைகளில் சிக்குண்டு பிரச்னைகளைத் தூண்டுகின்றனர்.

அனந்த்

பஞ்சாப்பில் அண்மைக் காலங்களில் நடந்த வன்முறைகள் பாரதூரமானவை.

இந்திராவின் மறைவையடுத்து தலைப்பாகை, தாடி மீசையுடன் காணப்பட்ட சீக்கியர்கள் அனைவரும் அசுரர்களாகவே பலருக்கும் தென்பட்டனர்.

ஆனல் டாக்டர் கோபால் சிங் போன்றவர்கள் இந்தியாவில் அந்த ஒரு சிறுதுளியான மக்களை தமது உயர்ந்த பணிகளால் உலகின் கண்களிலிருந்து கவசம் போல் காத்து நிற்கின்றனர். ★

## இரு சீக்கியர்களுக்காக முழுச்சீக்கிய இனம் மீதும் பழிபோடக்கூடாது!

நாட்டின் சட்டங்களுக்கமைய கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும். ஆனல் அந்தக்கொலைஞர்களை சீக்கியர்கள் என்றுமட்டும் வேறுபடுத்தி அழைக்கவேண்டாம்'' என்கிறார் டாக்டர் கோபால்சிங்.

இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்துள்ள இவர், அதனைத் தொடர்ந்து சீக்கியர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைகள் குறித்தும் கவலைகொண்டுள்ளார்.

### இந்துக்கள் என்பதா?

''மகாத்மா காந்தியை ஒரு இந்து சமயத் தீவிரவாதியே சுட்டுக்கொன்றான்? அதற்காக அக்கொலைஞனை இந்து என்று வேறுபடுத்தி மதத்தின் பெயரால் அழைக்கலாமா?''

''சாம்பல் பள்ளத்தாக்கில் (Chambal Valley) கொள்ளைக் கூட்டத்தவர்களின் கெடுபிடிகள் மிகவும் பயங்கரமானவை. எனவே அந்தப் பயங்கரவாதிகளையும் இந்துப்பயங்கரவாதிகள் என்று அழைப்பது? போன்ற கேள்விகளை டாக்டர் கோபால்சிங் சீக்கியர் மீது வெறுப்பைக் கொட்டுகிறவர்களைப் பார்த்துக் கேட்கிருர்.

சீக்கிய அகாலிகள் அம்மாநிலத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றமுடியாமல் போனதாலேயே அவர்களின் போக்கு வன்முறையாக மாறியது''

பஞ்சாப் மாநிலத்தை சீக்கியர்களுக்காக இரண்டாக்கி ஹரியாளு என்ற பகுதியை அமைத்ததை கேலித்தனமான செயல் என்று கூறும் இவர், இப்பிரிவினையில் இரு அரசாங்க நிறுவனங்களே இன அடிப்படையில் பிளவுபடவில்லையென்றும் அவற்றில் ஒன்று பஞ்சாப்-ஹரியாளு மேல் நீதிமன்றம், மற்றயது அமிர்தசரஸ் மனநோயாளர் சிகிச்சை நிலையம் என்று கூறுகிருர்.

டாக்டர் கோபால் சிங் சீக்கியர்களது வரலாறு பற்றியும் பல் வேறு நூல்களை எழுதியுள்ளார்.

### வத்திக்கானில் ஒலிபரப்பு

சீக்கிய மதநூலை ஆங்கிலத்தில் நான்கு பாகங்களாக இவர் மொழி பெயர்த்துள்ளார். முன்னுள் ஜனதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு உட்பட இந்தியாவின்

# கிரெம்ளினிலிருந்து கிளம்பியுள்ள 'புன்னகை பூக்கும் புது முகம்

குருஷ்சேவ்வின் மறு அவதாரமோ எனப் பல அரசியல் அவதானிகளால் வர்ணிக்கப் படும் 'புன்னகை பூக்கும் புது முகம்' ஒன்று. கிரெம்ளின் 'இரும்புத்திரைக் கோட்டை' யிலிருந்து புறப்பட்டுள்ளது!

கிரெம்ளின் தலைமைப்பீடத்தில் அடிக்கடி தானும் அடிபடாத ஒரு மிஹாயில் கொர்பாச்சேவ், இன்று மேற்குலகினை 'ஆகர்ஷிக்கின்ற' ராஜதந்திர சாணக்கியத்தில் ஈடுபட்டுள்ளதாகப் பல அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

யார் எதுவித அபிப்பிராயங்களைக் கூறினலும் கொர்பசேவ்வின் பிரிட்டிஷ் விஜயம் சோவியத் யூனியனைப் பொறுத்தவரை பல பிரிட்டிஷ் அரசியல் பிரமுகர்கள் ஏற்கனவே கொண்டிருந்த அபிப்பிராயத்தை மாறவைத்துள்ளதென்னவோ உண்மையே.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் உயர் பீடத்தில் திடீரென ஒருவர் பதவி உயர்வு பெறுவது அபூர்வம்தான். இரும்புத் திரையின் பின்னே எதுவும் நடக்கலாம் என்பதற்கு கொர்பசேவ்வின் 'திடீர்

பிரவேசமும்' ஓர் உதாரணம் எனலாம்;

'' 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை 'இதோ புன்னகைத்த முகத்துடன் ஒரு கரடி நுழைகிறது!' எனத் தனது முதற் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் 'எச்சரிக்கை' ஒன்றை விடுத்திருந்தாலும் கொர்பசேவ் பிரிட்டிஷ் ஆளும் வட்டாரப்பிரமுகர்களை மட்டுமன்றி பொதுமக்களின் நல்லபிப்பிராயத்தையும் சம்பாதித்துக்கொண்டுள்ளார் என 'ராய்ட்டர்' செய்தி விமர்சகர்களே கூறியுள்ளார்கள் சோவியத் - பிரிட்டிஷ் இருதரப்பு உறவுகள் சீரடைவதற்கு இது ஒரு நல்ல சகுனம் போல் தோன்றுகிறது

ஷண்

1950களில் குருஷ் சேவ் பிரிட்டனுக்கு மேற்கொண்ட 'குஷி'யான விஜயத்தை கொர்பாசேவ் விஜயம் நினைவுகூருவதாயுள்ளது. கேலித்தனமான கிண்டலான குத்தலான கூற்றுகளுக்குப் பேர்போன குருஷ்சேவை நினைவுபடுத்தும் வகையில் கொர்பாசேவ்வும் நடந்துகொண்டிருப்பதற்குப் பின்வருவது நல்லதோர் உதாரணம்;

தமது பிரிட்டிஷ் விஜயத்தின் போது உலகப் பிரசித்தி பெற்ற 'பிரிட்டிஷ் மியூசிய'த்துக்கு (இந்த மியூஸியத்தில் இருந்துதான் 'இம்மியூசியத்தின் பைபிள், எனப் பலரால் வர்ணிக்கப்பட்ட 'டாஸ்கப்பிடால்' என்ற மார்க்ஸிய தத்துவ நூலை கார்ல்மார்க்ஸ் எழுதினர். கொர்பாசேவ் விஜயஞ் செய்தபோது, நிருபரொருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் ''மக்கள் மாக்ஸிய விரோதிகளாக இருப்பார்களாயின், அந்த விரோதப்பாங்கான 'பழி' பிரிட்டிஷ் மியூசியத்தையே சாரும்" என நகைச்சுவையாகப் பதிலளித்தார்.

சோவியத் யூனியனில் மத விசுவாசிகள் தொந்தரவுக்குள்ளாகிருர்கள் என ஒரு நிருபர் கேட்டபோது, 'உங்கள் சமுதாயத்தை நீங்களே ஆளுங்கள். எமது சமுதாயத்தைப் பாலிக்கும் பொறுப்பை எம்மிடமே விட்டுவிடுங்கள்' என கொர்பசேவ் குத்தலாகக் கூறி விஷயத்தைச் சமாளித்துக் கொண்டார்

பிரிட்டிஷ் பிரதமர் மாகரட் தாட்சரே 'கொர்பசேவின் விஜயம் திருப்தியானது, சந்தோஷகரமானது. நம்பிக்கையூட்டுவது' என வெளிப்படையாகவே கூறியிருக்கும் போது லண்டன் நகர டாக்ஸி டிரைவர் ஒருவர் பின்வருமாறு கூறியதில்ஆச்சரியமில்லை; ''எல்லா ரஷ்யர்களுமே இவரைப்போல் இருப்பார்களேயானல், அந் நாட்டைவிட்டு நாம் ஏன்தான் கலவரப்படவேண்டுமோ தெரியவில்லை''

## நினைவில் நிறைந்த அரசியலார் - 9

# பிரஞ்சு நிபுணரைத் திகைக்க வைத்தவர் ஜி. ஜி.

திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், வ. ந. நவரத்தினம், க. துரைத்தினம், கா. பொ. இரத்தினம் ஆகிய நால்வர் மீதும் தனித்தமிழ் ஈழத்தை அமைக்கக்கோரும் துண்டுப் பிரசுரங்களை வைத்திருந்ததற்காகவும் அவற்றை மக்களுக்கு விநியோகித்ததற்காகவும் பிறவுக்காகவும் 1976ஆம் ஆண்டு மே மாதம் 31ந் தேதி குற்றம் சாட்டப்பட்டது.

இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர். மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கியட்ரயல் அட்பார் முறையில் நீதிமன்றம் அமைக்கப்பட ஏதுவான அவசரகால விதிகள் செல்லுபடியற்றவை எனத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

திரு. ஜி. ஜி பொன்னம்பலம் ஆஜராகி வாதாடிய வழக்குகள் பிரபல்யம் பெற்

மேல்நீதிமன்ற நீதிபதிகள் மூவரின் முன்னிலையில் ஜூரிமார் இல்லாத ட்ரயல் அட்பார் முறையில் வழக்கு விசாரிக்கப்பட்டது.

இவ்வழக்கில் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம். திரு. மு. திருச்செல்வம், திரு வி. எஸ். ஏ. புள்ளநாயகம் ஆகியோர் எதிரிகள் சார்பில் ஆஜராகிவாதாடினர்.

இந்த வழக்கே திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆஜராகி

எஸ். எம். ஜி.


வாதாடிய கடைசி வழக்காகும். 1976-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ஆந் திகதி

றன. ரஞ்சனி டாக்ஸி வழக்கும் இதில் ஒன்று ஜி ஜி. யின் குறுக்கு விசாரணைகளில் சாட்சிகள் மயங்கி விழுவது சாதாரண சம்பவங்கள். சாட்சி மயங்கி விழுந்ததும் வழக்கு விசாரணை சிறிது நேரம் ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் தொடங்கும். சில சமயங்களில் மீண்டும் மயங்கி விழுந்ததும் விசாரணை மறுதினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டதும் உண்டு.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தங்கப்பவுண் வழக்கு ஒன்று நடைபெற்றது. இந்த

(11 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாரிகாலம்

'சத்தியசீலன்'

மழைபொழியும் அழகான மாரிகாலம்
மண்குளிரக் கண்குளிரும் மாரிகாலம்
இலைகழுவி, முகங்கழுவி மரங்கள் எல்லாம்
எமைபார்த்துச் சிரிக்கின்ற மாரிகாலம்

பூத்திருக்கும் மலர் கூட புதையும் வண்ணம்
புது வெள்ளம் ஓடிவரும் மாரிகாலம்
பார்த்திருக்க முற்றத்தில் வெள்ளம் போடப்
பாயில்லாக் கப்பல் விடும் மாரிகாலம்

என்வீட்டு முற்றத்தில் தலைகீழாக
எதிர்வீடு மிதக்கின்ற மாரிகாலம்
தன்பாட்டில் நம் வீட்டுக் குரோட்டன் எல்லாம்
தளிர் காட்டி இலை நீட்டும் மாரிகாலம்

தாவாரத்தில் நின்று குட்டித்தம்பி
தவளைக்குக் கல்லெறியும் மாரிகாலம்
சாவாரைப் போற்கிடந்த தவளை அண்ணர்
திடுக்கிட்டுத் துள்ளி எழும் மாரிகாலம்

குடைகொண்டு போகத் தான் பஞ்சிப்பட்டுக்
கொளுத்திறது வெய்யில் எனப் போகுந் தம்பர்
படை கொண்டு வருகின்ற மழையைக் கண்டு
பயந் தோடும் காலமடா மாரிகாலம்

வாள் என்றே ஊளையிடும் காற்றுக்காக
வடிவாகக் குடைபிடிக்கும் கூனல் தாத்தா
ஆளோடு போய் மோதிக் குடையை விட்டு
அந்தரிக்கும் காலமடா மாரிகாலம்.

இரவிரவாய்த் தவளையர்கள் தாளம்போட...
இருட்டினிலே கொசுவார் வந்து ஊசி போட...
'சரசரென' இடையிடையே மழையும் தூறத்
தாத்தாமார் சலிக்கின்ற மாரிகாலம்.

அடுக்களைக்குப் போய் எங்கள் அம்மா, சும்மா
அடுப்போடே போராடும் மாரிகாலம்
கடுக்கனுடன் நடுங்குகிற தாத்தாவுக்குக்
கடுகதியில் கோப்பிவரும் மாரிகாலம்

கூவாத சேவலுடன் நனையும் கோழி
கொப்பை விட்டே இறங்காத மாரிகாலம்
தாவரத்தேனின்று பாட்டிபோட்ட
தவிட்டோடு வாழுகிற மாரிகாலம்

பச்சைப்புல் தின்னுகிற பசு அம்மாச்சி
பனையோலை தின்னுகிற மாரிகாலம்
இச்சையுடன் வருகின்ற நுளம்பை, வாலால்
எறிந்தெல்லோ கலைக்கின்ற மாரிகாலம்

சிட்டோடு விளையாடும் ஆட்டுக்குட்டி
சீ என்று சொல்லுகிற மாரிகாலம்
கட்டோடு கிடக்கின்ற ஆட்டுக்காகக்
கதியாலை முறிக்கின்ற மாரிகாலம்

தெருவாலே போறவரைத் திட்டிக்கொண்டு
திரும்பாமல் குரைக்கின்ற நாய்கள் எல்லாம்
ஒருவாலை, இருகாலுக்குள்ளே போட்டு
ஒடுங்குகிற காலமடா மாரிகாலம்

தண்ணியிலே இனி நனைய முடியாதென்று
தவளையனார் தத்தி, ஒரு கல்மேல் ஏறிக்
கண்ணிரண்டை உருட்டி, மழை முகிலைப் பார்க்கும்
காலமடா, பொல்லாத மாரிகாலம்.

(அடுத்தவாரம் பார்க்க)

## அறுபதினாயிரம்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ரையை மீளாக்கம் செய்து கொடுத்தார். கட்டுரை வெளிவரும் வரை நியூயோக்கர் அதுபற்றி வெளியார் எவருக்கும் தெரியாது மறைத்தே வைத்திருந்தது. 1946 ஒகஸ்ட் 31 ஆந் திகதி கட்டுரை வெளியாயிற்று. அமெரிக்கப் பத்திரிகை உலகிலேயே இது உன்னதமான கிளர்ச்சி நிறைந்த வரலாற்றினைப் படைத்து விட்டதெனலாம். பத்திரிகை வெளியான சில மணித்தியாலங்களில் பிரதிகள் யாவும் விற்பனையாகி விட்டன. நியூயோக் ஹெறால், ட்ரிபியூன் வாஷிங்டன் போஸ்ற் சிக்தூரகோசன். பொஸ்டன் குளோப் முதலான பத்திரிகைகள் இக் கட்டுரையைத் தொடர்ச்சியாக வெளியிட அனுமதிகோரி 'நியூயோக்கர்' உரிமையாளருக்கு விண்ணப்பித்த கடிதங்கள் வந்து குவிந்தன. ஜோன் ஹேசியின் நேரடிமேற் பார்வையில் அவரின் கட்டுரையின் சுருக்கம் தயாரிக்கப் பட்டு வானொலியில் தொடர்ச்சியாக ஒலிபரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஏறக்குறைய ஐம்பது அமெரிக்கப் பத்திரிகைகள் அதனைத் தொடர்ச்சியாக வெளியிட அனுமதி பெற்றுக் கொண்டன. வரிக்கழிவின் பின்னர் கிடைத்த தமது பதிப்புரமைப் பணத்தினை ஜோன் ஹேசி அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்கினார். அல்பேட் ஈன்ஸ்டீன், கட்டுரை வெளியான பத்திரிகையின் ஆயிரம் பிரதிகளை முன்னறிவித்துவிலைக்குப் பெற்றுக் கொண்டார். நாடகமாகமேடை யேற்றும் உரிமை கோரி ஆசிரியருக்கு விண்ணப்பித்துவரும் பலர். இக் கோரிக்கையை அவர் ஏற்கவில்லை எனினும் பத்திரிகைகள் கூட்டாகச் சேர்ந்து கட்டுரையை மீளுருச்செய்து வெயிடும் உரிமைகளை பெற முயன்றன. ஆனல் 'நியூயோக்கர்' உரிமையாளர்கள் அதனைத் திருத்தல், கழித்தல் செய்து வெளியிடும் உரிமையை வழங்கவில்லை. பிரித்தானிய பத்திரிகைகள் முழுமையாக வெளியிட முடியா நிலையில் சுருக்கி வெளியிடும் உரிமைகோரி மேலும் வாதிட்டன. பிரித்தானிய வானொலி நிலையமான பி.பி.ஸி கட்டுரையை நாலு பிரிவுகளாகப் பிரித்து நாலுதடவைகள்தொடர்ச்சியாக ஒலிபரப்பும் உரிமையையும், அமெரிக்க மாதாந்தப் புத்தகக் கிளப் நூல் பிரசுர உரிமையையும் மிகவும் சிரமத்துக்கிடையிலே பெற்றுக் கொண்டன. இறுதியாக 1946 முடிவில் பெங்குயின் பதிப்பகம் நூல் வெளியீட்டுரிமையைப் பெற்று 'ஹிரோஷிமா'வை வெளியிட்டது.

இத்தனை பரபரப்புக்களும் எதிர்பார்ப்பும் ஆர்வமும் 'மனிதப் பேரழிவு' ஒன்றினைப் அறிவதில் மக்களுக்கு இருந்தன என்றால் இதுவும் மனித இயற்கை என்று தானே சொல்லத் தோன்றுகிறது?''

'ஹிரோஷிமா' புத்தகத்தில் இந்தப்பகுதியை வாசித்த பொழுது எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு என் உறவினர் ஒருவர் பாம்பினால் தீண்டப்பட்டார் என்ற செய்தி எங்களுக்குக் கிடைத்தது. ஆபத்து நிலையைத்தாண்டி விட்டார் என்றும் வைத்தியம் தொடர்கிறது என்றும் அறிந்தோம். எனவே பரபரப்பின்றி இரண்டு நாள்களுக்குப்பின் நானும் என்மனைவியும்அவரை அவரது வீட்டிலே சுகம் விசாரிக்கச்சென்றோம் அந்த வேளையில் பாம்புக்கடியுண்டவரின் மனைவி எங்களை வரவேற்றார். கணவருக்குப் பாம்பு கடித்ததே என்ற கவலையோ, அதனால் ஏற்பட்ட நெருக்கடிகள் பற்றிய உணர்வோ அவரின் முகத்தில் கடுகத்தனையும் இல்லை. தம்முடைய கணவரைப்பார்க்க வந்த பிரமுகர்கள் அவர்கள் வந்த கார்கள், மோட்டார் சைக்கிள்கள் பற்றிய வருணனையாகவே அந்தப் பெண்மணியின் பேச்சு முழுவதும் இருந்தது. இவரின் மனப்போக்குக்கும் அமெரிக்கப்பத்திரிகைகளின் விளம்பர மனோபாவத்திற்கும் எத்தகைய வேறுபாடும் இருப்பதாக எனக்குத்தோற்றவில்லை 'அடிமை மனம்' என்று பேராசிரியர் மு. வரதராசன் எழுதிய கட்டுரைக்கு மனிதர்கள் எவ்வளவு பொருத்தமானவர்களாய்க் காட்சி தருகின்றனர்!

இது எவ்வாறாயினும் ஜோன் ஹேசியின் நூல் அணுகுண்டுப் பயங்கரத்தினை மிகவும்எதார்த்தமாகச் சித்திரிக்கத்தவறவில்லை என்பது உண்மையே.

அடுத்த இதழில் அதன் சுருக்கத்தைத் தருகிறேன்

## பிரெஞ்சு நிபு---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கில் முடிக்குரிய தரப்பில் தங்கப்பவுன் சம்பந்தப்பட்ட நிபுணர் ஒருவரை சாட்சியாக அழைத்திருந்தது. அவர் ஒரு பிரஞ்சுக்காரர்.

இந்த வழக்கில் எதிரிக்காக திரு. ஜி ஜி. பொன்னம்பலம் ஆஜராகிவாதாடினார் பிரஞ்சு நிபுணரை முடிக்குரிய தரப்பினர் விசாரணை செய்தனர். அவரது சாட்சியம் முடிந்ததும் ஜி ஜி. அவரைக்குறுக்கு விசாரணை செய்தார்.

ஆங்கிலத்தில் கேள்விகள் கேட்டு வந்த ஜி. ஜி. திடீரென்று பிரஞ்சு மொழியில் கேள்விகள் கேட்கத்தொடங்கினார். நீதிமன்றம் ஆச்சரியப்பட்டதும் மட்டுமன்றி பிரஞ்சு நிபுணர் அதிர்ந்து போனார்.

தங்கப்பவுண் வழக்கில் நிபுணத்துவ சாட்சியமளிக்க வந்த பிரஞ்சுக்காரர் இதில் ஒரு நிபுணரேயல்ல என்ற வகையில் ஜி. ஜி. தமது வாதத் திறமையால் நிரூபித்து வழக்கில் வெற்றிகண்டார்.

ஆங்கிலம், பிரஞ்சு, தமிழ் சிங்களம் ஆகிய மொழிகளில் பல வழக்குகளிலும் குறுக்கு விசாரணைகள் செய்தவர் ஜி. ஜி.

காலியில் டாக்டர் குலரத்தின மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் ஜி ஜி. ஆஜரானார். அந்த வழக்கு காலியில் மட்டுமல்ல நாடு முழுவதுமே கொலையுண்ட திருமதி குலரத்தினவுக்கு அனுதாபத்தை ஏற்படுத்தியிருந்தது. பத்திரிகைகளில் இக்கொலைபற்றிய செய்திகளும் புகைப்படங்களும் வெளியாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதனால் அசைஸ் நீதிமன்றத்தில் ஜூரிமார் முன்னிலையில் நடந்த இவ்வழக்கின் தீர்ப்பு ஜி. ஜிக்கு வெற்றியைத் தரவில்லை. ஆனாலும் மேல் நீதிமன்ற அப்பீலில் எதிரி விடுதலையானார்.

ஜி. ஜி. யின் சட்டத்துறைச் சாதனைகள் பல. விரிவாக எழுதினால் பல தொகுதிகள் எழுத வேண்டும்.

(மிகுதி அடுத்தவாரம்)

↓ V

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | | | | | | | ● |
| ● | | | | வி | ● | ● | ● |
| ● | ● | ● | | | ல் | ● | ● |
| ● | ● | ● | மு | | | ● | ● |
| ● | ● | ● | | த | | ● | ● |
| ● | ● | | வ | | ● | ● | ● |
| ● | ● | ● | | | டு | ● | ● |
| ● | ● | து | | | | ● | ● |
| ● | | லு | | | ● | ● | ● |
| ● | ● | | ங் | | | | ● |
| ● | ● | | | ண் | | | ● |
| ● | ● | த | | | | ● | ● |
| ● | | | நீ | | ● | ● | ● |
| ● | ● | ● | ● | | ம் | | ● |
| ● | ● | ● | | ஞ் | | | ● |
| ● | ● | | யா | | | ● | ● |
| ● | | ஞ் | | | ● | ● | ● |

1. காலஞ் சென்ற இந்தியப் பிரதமர்.
2. பசி உண்டாகின்றது என்பதற்கு அறிகுறி.
3. கன்னியர் விழிகளை இதற்கு உவமானம் சொன்னார் புலவர்.
4. சிப்பியில் இருப்பது.
5. டீன்ஏஜ்வயதினர்க்குவருவது
6. இது இல்லாத மனிதனே இல்லை எனலாம்.
7. கால் நடைகளுக்கு கரைத்துக் கொடுக்கும உணவு.
8. தெல்லிப்பழையில் வீற்றிருக்கும் அன்னை.
9. இந்தியத் திரைவானில் கவர்ச்சித் தாரகை.
10. கண்ணிவெடிகளை இந்தக் கடலில் தான் தேடினார்கள்.
11. 1985ம் வருட இது இப் போதே அச்சிடப்படுகின்றது.
12. தாகத்துக்கு இதைத்தான் குடிக்க வேண்டும்.
13. பனையின் இனிய பானமிது'
15. எம்மைப் பெற்றவள்
16. கறுப்பழகியையும்சிவப்பழகியாக்கும் மூலிகை.
17. கல்யாணப் பந்தியில் கடைசியாக கொடுக்கப்படும் பானம்.
18. பஞ்சபாண்டவரின் ஒரே மனைவி

எல்லா விடைகளையும் எழுதியதும் அம்புக்குறியிடப்பட்ட இடத்திலிருந்து மேலிருந்து கீழாக வாசித்தால் ஒரு சம்பவம் எமது நினைவுக்கு வரும்.

அனுப்பியவர்:
வே. லோகநாதன்

விமான டிக்கட்டுக்களை மலிவாகப் பெறுவதற்கும்
பிரான்ஸ் ஜேர்மனி
மற்றும் நாடுகளுக்குச் செல்வதற்கான
பிரயாண ஒழுங்குகளை செய்வதற்கும்
யாழ்நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்
TET
ரான்ஸ் யூரோ ரவல்ஸ்
தொடர்பு: திரு. மகேந்திரராஜா,
ரான்ஸ் யூரோ ரவல்ஸ் இல. 6, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23831

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரச அதிபரிடம் நேற்று மகஜர்

# சுயநிர்ணய அடிப்படையில் அரசியல் தீர்வு வேண்டும்!

(சுண்டுக்குளி)

அப்பாவிகள் கைதுசெய்யப்படுவதை நிறுத்த வேண்டுமென்றும், சுயநிர்ணய அடிப்படையில் அரசியல்தீர்வு காண வேண்டுமென்றும் கோரி வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு நேற்று யாழ். செயலகத்தில் மகஜரொன்றைக் கையளித்தது.

சுமார் 200 அங்கத்தவர்கள் (பெண்கள் உட்பட) சுலோகங்களைத் தாங்கியவண்ணம் நேற்றுக் காலை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைச் சமர்ப்பித்தனர்.

வடபிரதேச தொழிற்சங்கக் கூட்டுக் குழுச் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் இம் மகஜரை திரு. பஞ்சலிங்கத்திடம் கையளித்தார்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து சகல ஆயுதப் படையினரையும் முற்றாக வாபஸ்பெறவேண்டும்.

அவசரகால இராணுவ ஆட்சியை இம்மாகாணங்களில் முடிவுக்குக் கொண்டுவருவதுடன் சிவில் நிர்வாகத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவருதல்.

ஆயுதப் படையினரால் படுகொலைசெய்யப்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்கள் உட்படப் பாதிக்கப்பட்ட அனைவர்க்கும், மற்றும் ஊனமுற்றோர், படுகாயமடைந்தோர்க்கும் போதியளவு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சகலரையும் விடுதலைசெய்வதுடன் பயங்கரவாதத் தடைச் சட்டம்போன்ற அடக்குமுறைச் சட்டங்களையும் நீக்க வேண்டும்.

## திடீர் வேட்டையில் சிக்கினர்

(சுண்டுக்குளி)

யாழ். நகரில் உள்ள ஒரு பிரபல வர்த்தகர் 10 ரூ 13 சதம் விற்கவேண்டிய ½ கிலோ மைசூர் பருப்பை 12 ரூ 50 சதத்திற்கு விற்பனைசெய்தபோது விலைக்கட்டுப்பாட்டதிகாரிகளினால் கையும் மெய்யுமாக பிடிபட்டார். இத்திடீர் வேட்டையை உள்நாட்டு விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்கள பொறுப்பதிகாரி திரு. எஸ் யேசுதாசன் தலைமையில் சென்ற கோஷ்டியினர் மேற்கொண்டுள்ளனர்.

## வருக

புத்தாண்டே நீ வருக!
புகழ் கோடி நீ பெறுக!
பித்தம் செறிந்து...
சித்தம் கலங்கி...
பட்டினி விரதமும்
மௌனத் தவமும்
உள்ளக் காயங்களின்...
உறுத்தல் நிலை தொடர்ந்து
உண்மை நிலை மறந்து
உரிமைதனை இழந்து...
ஓ..!
முடிந்து போகும் எண்பத்து நாலே
முகாரியின் ஓசையில்
முடிவுகள் முழங்காமல்
சகதி சிந்தனைகளை
சந்தியில் போட்டு விட்டு
புதிய அனுபவத்துக்காய்
புறப்பட்டு வருகின்ற
புத்தாண்டே நீ வருக
புகழ் கோடி நீ பெறுக!

-கஜன்

## மகாசிவம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கிராமிய வங்கியில் கணக்கு ஒன்றை ஆரம்பித்து, அக்கணக்கில் ஒவ்வொரு மாதமும் 20ம் திகதி ஆசிரியர்களின சம்பளத்தை வழங்கஏற்பாடுசெய்ய வேண்டும் என்று இலங்கைத் தமிழர்ஆசிரியர்சங்கப் பொதுச் செயலாளர் திரு த மகாசிவம் வடமாநில கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து கேட்டுக்கொண்டார். [மா-க]

பேர்லின் (BERLIN)
செல்பவர்களுக்கு ஒரு நற்செய்தி!

சிக்கனமான
பாதுகாப்பான
நம்பிக்கையான
நாணயமான

பிரயாண ஒழுங்குகளுக்கு உடனடியான ஆசனப்பதிவுகளுக்கும்
இன்றே நாடுங்கள்

அமெரிக்கன் லோயிட்
(சிலோன்) லிமிட்டெட்,
(சர்வதேச விமானப்போக்குவரத்து முகவர்கள்)
AMERICAN LLOYD
(Ceylon) LIMITED
(International Air Transport Agents)
கொழும்பில் தொடர்பு கொள்ளும் முகவரிகள்:

151, தர்மபால மாவத்த,
கொழும்பு - 07.
தொலைபேசி:
20344, 26911, 28347

W- 4, 5 ஆம் மாடி
"சிலிங்கோஹவுஸ்"
கொழும்பு - 01.
தொலைபேசி:
24494, 28892, 29806

★ யாழ் குடாநாட்டிலும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள் வெகுவிரைவில் அறிவிக்கப்படும்.
1051

L. P. Gas
இங்கே பெற்றுக் கொள்ளலாம்.
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தேவை

இந்து சமய வேதத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள இரண்டாம் வருணமாகிய க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்த செங்குந்த குலத்து மேற்பிரிவினைச் சேர்ந்ததும் சீரிய பழக்கவழக்கங்கள், அழகு, நல்லறிவு, விவேகமுள்ளதும், 37, 34 வயதுடையதுமான இரு பெண்களுக்கு மணமகன்மார் தேவை.

பேராசைக்கு இடமில்லாத வகையில் நீதியான முறையில் தராதரத்திற்கேற்றபடி வீடு உட்பட சீதனமும் வழங்கப்படும் சாந்தகுணமும், அழகும், அநாவசிய பழக்கவழக்கங்கள் இல்லாத பசுமையான மாப்பிள்ளைகளுக்கு அனுபோகமான வாய்ப்பு ஆகும். காலநிலைக்கேற்றபடி குடும்பத்தை பராமரிக்கக்கூடிய கணிசமான வருமானமுள்ளவர்களாக இருத்தலோடு சாதகப்பொருத்தமும் முக்கியமாகக் கருதப்படும்.

விளம்பர இல: 1144 C/o ஈழநாடு
1144

ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

றீகல் மினி
10-15, 1-15
மோகன்-மாதவி
நடிக்கும்
பாலாஜியின்
நிரபராதி

இன்று முதல்
ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
ஜெய்சங்கர்-நிர்மலா
சுந்தரராஜன்
நீதிதேவன்
(புத்தம் புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதே
தாயில்லாமல்
நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்)
10-30, 2-15
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
சிவப்பு சூரியன்
(ஈஸ்ட்மன் கலர்(

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film -
Action packed)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-30,
சிவாஜி, கமலகாசன்,
ஸ்ரீதேவி
நடித்த
சத்தியம்
(ஈஸ்மன் கலர்)

# பாதுகா பட்டாபிஷேகம்

நமது ஆன்மீக சக்தியின் உணர்வைப் பொறுத்தே நமது சர்வதேசச்செல்வாக்கு செல்லுபடியாகும் என்றார் மகாத்மாகாந்தி.

இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் மரணச்சடங்குக்கு வந்திருந்த உலகத் தலைவர்கள் இந்த உண்மைக்குச் சான்று பகர்ந்தனர். குறிப்பாக பிரிட்டிஷ் பிரதமர் புதிய பிரதமர் ரஜீவின் ஆற்றலை வெகுவாக வெளி வெளியாகப் பாராட்டினர்.

அக்டோபர் 31ல் பிரதமர் இந்திரா சடுதியில் மறைந்தார். வேற்றூருக்குச் சென்றிருந்த மகன் ரஜீவ் விரைந்தபோதும் தாயாரை உயருடன் காணவில்லை. மாலை சுமார் 5-30க்கு வெளிநாடு சென்றிருந்த இந்திய ஜனாதிபதி மருத்துவமனைக்கு விரைந்து மறைந்த பிரதமருக்கு அஞ்சலி செலுத்தினார்; ரஜீவ் காந்தியை ராஷ்டிரபதி பவானுக்கு வரும்படி வாயால் அழைக்கிறார்.

சுமார் 6-30க்கு ரஜீவ் புதிய பிரதமரானார். உலக வரலாறு காணாத ஜனநாயக மரபு இது. அகில உலகும் இன்று அதிர்ச்சியடையும் வகையில் அன்று சுமார் 4½மணி இடைவழியில் நடந்த நியமனத்தை இன்று எழுபது கோடி மக்கள் கன்யாகுமரி தொடக்கம் காஷ்மீர்வரைக்கும் உள்ள நாடுகளுக்குப் பொதுவான பாரத பண்பின் பேரில் உறுதிப்படுத்தியுள்ளனர்; மகாத்மா குறிப்பிட்ட ஆன்மீகசக்தி இது.

ராமன் காட்டுக்குப் போனதும், பரதன் பாதுகா பட்டாபிஷேகம் நடத்தவேண்டியதை நாம் நாடகமாக, ஓடும் படமாகப் பார்த்தோம்.

இன்று இந்திரா காட்டுக்குப்போக அவருடைய பாதுகைக் குரித்தானவர் ரஜீவ் என்று ஆன்மீகத்தில் உறுதிகொண்ட பாரத தேச மக்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

இந்திய ஜனநாயகம் முன்னைப் பரம்பொருள்; இன்றைய புதுமைக்கும் அப்பெற்றியது.

## மலையக ஆசிரியர்களின் ரூ.60,000 கொள்ளை

[யாழ்ப்பாணம்]

மலைநாட்டில் கடமையாற்றும் 40 தமிழ் ஆசிரியர்களிடம் ஹட்டன், ரயில் நிலையத்தில் ஒரு கோஷ்டியினால் சுமார் 60,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 5-ம் தேதி ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் வருவதற்குப் புறப்பட்டபோது இச்சம்பவம் நடந்துள்ளது.

கடன் வழங்கும் சபையிடம் பெற்ற கடன்பணமும், சம்பளமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி ஆசிரியர்கள் பொலிசாரிடம் புகார் செய்யச் சென்றபோது ஒரு ஆசிரியையும், 3 ஆசிரியர்களும் கைதுசெய்யப்பட்டு 15 தினங்கள் றிமாண்டில் வைக்கப்பட்டதாகவும், பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா-க)

## எண்பத்தைந்து

காலத்தின் சுழற்சியிலே ஊர்ந்து ஒன்றைக்
கடந்தின்று எண்பத்தி ஐந்தாய் வந்தேன்
ஞாலத்தில் எத்தனையோ துயரக்கோவை
ஞானமகள் கண்களிலே செந்நீர் மாலை
ஓலங்கள் ஓர்பக்கம் துயரம் நீதி
ஒடுங்கிவிடும் கோள்பாடு தீ சுவாலை
ஏலத்தில் விலையாகும் ஆடுகள் போல்
எமன்வரவை எதிர்நோக்கி வீட்டுவாசல்
கோலமிது எண்பத்தி நான்கே உன்போல்
கொடியவனாய் என்வருகை இருத்தல் வேண்டாம்
தான் பிடித்த முயலுக்குக் கால் மூன்றென்ற
தன்பிடியை ஆட்சியினர் தளர்த்திநண்பால்
என்காலப் போது இருள் சூழ்ந்த நாட்டில்
எழிலான ''உரிமை ஒளி'' வீசவேண்டும்
முன்போல நீர்பெருக்கு வறட்சி என்று
மூச்சுவிடும் இயற்கை அதன் சீற்றமின்றி
இன்பத்தின் எல்லையிலே மக்கள் என்றும்
எண்பத்து ஐந்து எனை நினைத்தல் வேண்டும்

- நெடுந்தீவு லக்ஸ்மன்

T.C.C. குளியலறைத் தளக்கற்கள்
BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்
ரெருசோ மாபிள் நிலம்
அமைப்பவர்கள்
SPECIALIST IN TERRAZZO FLOORING
மின்சார வசதிஅற்ற இடங்களிலும்
ரெருசோ நிலம் அமைத்துக்கொடுக்கப்படும்
த ரெருசோ கொன்ருக்ரேஸ்
அன் கொன்சல்ரன்ஸ்

தலைமை அலுவலகம்:-
69, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

64, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சட்டநாதர் சிவன்கோவில்
அண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சுவையான தகவல்கள்

# கணவனின் அண்ணனிடம் கட்டுப்பணம் இழந்தார்

★ கணவர் அமோக வெற்றி பெற்ற தொகுதியில் போட்டி யிட்ட மனைவியோ கட்டுப் பணத்தை இழந்தார். ஆனால் தம்பியின் அதே தொகுதியில் போட்டியிட்ட அண்ணனே அமோக வெற்றி பெற்றுர் பிரதமர் ரஜீவ் காந்தியையும் அவரது மைத் துணியையும் தான் நாம் இங்கு குறிப்பிடுகின்றேம் அமேதி தொகுதியில் போட்டி யிட்ட ரஜீவ்காந்தி 3 லட்சத் துத்து 14 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் ராஜ்ரீய சஞ் சய் மந் வேட்பாளர் மேனகா காந்தியை வெற்றி பெற்றுர்.

★ இந்திய வெளியுறவு அமைச்சிலும், வெளிநாட்டி லும் தூதுவர்களாக இருந்த நட்பட், பி ஆர். நாராயணன் ஆகிய இருவரும் இந்திய பாராளுமன்றத்துக்கு தெரி வாகியுள்ளனர்.

★ சினிமா நட்சத்திரங்க ளானசுனில்தத்,அமிதாபச்சன் திருமதி வைஜந்திமாலா பாலி ஆகியோர்இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களாக இம்முறை பாராளுமன் றம் செல்கின்றனர்.

★ கொக்கிவீரர் அசலாம் சௌக்கான் எம்பியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

★ இமாசலப் பிரதேசத் தில் முதல் முறையாக ஒரு பெண் இந்திரா காங்கிரஸ் சார்பில் வெற்றி பெற்றுள் ளார்.

★ தமிழ்நாட்டில் மரக தம் சந்திரசேகர், திருமதி வைஜயந்திமாலா பாலி ஆகிய இருவரும் லோக்சபாவுக்கும், சரோஜா, யசோதா, வளர்மதி ஆகியோர் சட்ட சபைக்குமாக ஐந்து பெண்கள் தெரிவுசெய் யப்பட்டனர்.

## அனைவரும்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ளில் ஹரிஜன நலத்துறை அமைச்சர் விஜயசாரதி மட் டுமே தோல்வி கண்டார். 18 அமைச்சர்களில் 17 பேர் வெற்றி கண்டனர்.

சபாநாயகர் ராஜாராம் பனை மரத்துப் பட்டியில் அமோக வெற்றி பெற்றுர். துணை சபா நாயகர் பி எஸ். பாண்டியன்

அ.தி.மு.க. பொதுச் செயலா ளர் பா.உ.சன்முகம் ஆகியோ ரும் வெற்றி பெற்றனர். எம் ஜி.ஆர் மன்றத் தலைவர் முசி றிப்புத்தன் குளித்தலையில் அமோக வெற்றி பெற்றுர்

தி.மு க பொதுச்செயலாளர் அன்பழுகன் சென்னை பூங்கா நகர், தொகுதியிலும், துணைப் பொதுச் செயலாளர் நாஞ் சில்கே மனோகரன் புரசைவாக் கம் தொகுதியிலும் வெற்றி பெற்றனர்.

காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் குமரிஆனந் தன் ராதபுரம் தொகுதியில் வெற்றி பெற்றுர்.

லோக்சபாதேர்தலில் மாநில அமைச்சர் குழந்தைவேலு, இந்திரா காங்கிரஸ் சார்பில் மரகதம் சந்திரசேகர், சோசல் ராம் ரெங்க ராஜன் ஆகியோ ரும் வெற்றி பெற்றனர். (சூ)

லலித் கூறுகிருர்

# சிங்கள மக்களுக்கு ராணுவ பயிற்சி அளிக்கத் திட்டம்

[கொழும்பு]

"தமிழ்நாட்டில் பயிற்சியளிக் கப்படும் ஒவ்வொரு தமிழ்ப் பயங்கர வாதிகளுக்கும் பதி லாக நூறு இராணுவ வீரர்கள் இலங்கையில் உருவாக்கப்படு வார்கள்" என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரி வித்துள்ளார்.

சென். தோமஸ் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன் றில் நேற்று அவர் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினுர்.

தமிழ்நாட்டில் பயங்கரவாதி கள் முகாம் இருப்பதனை எண் ணிச் சிங்கள மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. தற் போது சிங்கள மக்கள் அனைவ ருக்கும் இராணுவப் பயிற்சி அளிக்கும்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (சூ)

## தவறியவர்கள் சந்திக்கலாம்

(கொழும்பு)

ஆங்கில ஆசிரியர் பதவிக் கான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றத் தவறியவர்கள் தம்மை கல்வி அமைச்சிலுள்ள கல்விசேவை ஆணைக்குழுக் காரியாலயத்தில் இம் மாதம் 31ம் திகதி முதல் 4ம் திகதி வரை சந்திக்கலாப் என்று ஆணைக்குழு பந்தவரின திரு க.ஜெயக்குமார் தெரிவித்துள் ளார்

## கணவர்கள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதே நேரத்தில் இந்த இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் சுகமாகவும், நலமாகவும் இருப் பதாகத் தகவல் கிடைத்துள் ளது.

இந்த இரு பொலிஸ் இன்ஸ் பெக்டர்களும் 1983 ஜூலை இனக் கலவரத்தின் போது, குருநாகல் பகுதியில் இனக் கலவரம் மூளாது தடுத்து, தமி ழர்களைக் காப்பாற்றிய வர்கள் என்றும், அவ்விதமான நல் மனப்பான்மையுள்ள இவ் விருவரையும் விடுவிக்குமாறு கோரி குருநாகலில் வசிக்கும் 25 தமிழர்கள் கையெழுத்திட்டு மகஜரொன்றைப் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் நேற் றுக் கையளித்தனர். இந்தத் தகவலை பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தர லிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாகத் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தி யில், "கடத்தப்பட்டவர்களை விடுதலைசெய்ய அரசாங்கம் சகல வழிகளிலும் முயற்சிசெய் வதாகவும், இத்தகைய முயற்சி கள் மிக இரகசியமான முறை யில் நடைபெறுவதாகவும், இவற்றை உடனடியாக வெளி யிட்டால் இவற்றின் பலா பலன்களைப் பெறமுடியாது" என்றும் தெரிவித்துள்ளார். (சூ)

## தி மு. க. கூட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிரஸ் தலைவர் திரு நெடுமா றன் மதுரை மத்திய தொகு தியில் தோல்வி கண்டார் மாக்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் திரு நல்ல சிவம் இந்திய கம்யூனிஸ்ட் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு அழகிரிசாமி ஆகி யோரும் தோல்வி கண்டனர்,

அ தி மு க விலிருந்து அகற் றப்பட்ட முன்னுள் அமைச்சர் எஸ், டி சோமசுந்தரம் பட் டுக்கோட்டையில் படுதோல்வி கண்டதுடன் கட்டுப்பணமும் இழந்தார், கலைக்கப்பட்ட சட்டசபை இந்திரா காங்கி ரஸ் தலைவர் ராஜா சரீவ்வும் திருவல்லிக்கேணியில் தோற்க டிக்கப்பட்டார்.

தமிழ்நாடு லோக்சபாத் தொகுதிகளில் இந்திய கம் யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆர். உமாநாத், சங்கர் ஐயா, ஜனதாக்கட்சி மாநிலத் தலை வர் இராமசழியன், தி.மு.க வைச்சேர்ந்த மாயத்தேவர் [illegible] தோல்வி கண்ட னர் (சூ)

## நேற்று பளைவரை ரயில்

[யாழ்ப்பாணம்]

முகமாலைப் பகுதியூடாக உள்ள புகையிரதப் பாதையில் குண்டுகள் புதைத்து வைக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து, நேற் றுக்காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த யாழ்.தேவி பளை புகையிரத நிலையத்துடன் நிறுத்தப்பட் டது.

நேற்றுப் பிற்பகல் பளைக்கு வந்த யாழ் தேவி அங்கிருந்தே கொழும்பு நோக்கிப் புறப்பட் டது.

இதனுல் நேற்று நண்பகல் கொழுபு செல்வதற்கு யாழ் ரயில் நிலையத்தில் காத்துநின்ற ஏராளமான பிரயாணிகள் ஏமாற்றத்துக்கிள்ளாகினர். (மா)

துப்பாக்கிமுனையில்

## யாழ் தபால் நிலையத்தில் நடந்த கொள்ளை முயற்சி!

(யாழ்ப்பாணம்,

யாழ்ப்பாணம் தபாற்கந்தோ ரில் நேற்றுப் பிற்பகல் துப் பாக்கி முனையில் வானைக் கொள்ளையடிக்கும் முயற்சி நடைபெற்றது.

இனந்தெரியாத கோஷ்டி யினர் வந்து, 'வான் தேவை' என்று கேட்டதாகவும், பின் னர் சாவியைக் கேட்டதாக வும் கூறப்படுகிறது.

ஊழியர்கள் வான் குருநகர் செல்லவிருப்பதாகக் கூறியதா கவும் தெரியவருகிறது. இதன் பின் அக்கோஷ்டியினர் சென்று விட்டனர். (க-மா)

## ரஜீவ்...

(1பக்கத் தொடர்ச்சி)

வெளிவரவில்லை ஆயினும் இந் திரா காங்கிரஸ் 400 இடங் களை கைப்பற்றலாம் என நம் பப்படுகிறது. தற்போதைய முடிவுகளின்படு 80 சத வீத மான தொகுதிகளை இக்கட்சி பெற்றுள்ளது.

அமோக வெற்றியடைந்த பிர தமர் திரு ரஜீவ் காந்தி இன் னும் இரு தினங்களில் புதிய அமைச்சரவை அமைக்கப்ப டும் என்று தெரிவித்துள்ளார்.

## முதல்வராகப்

((1ம் பக்கத் தொடர்ச்சி

காகக் காத்திருக்கும் விதத் திலோ இந்த ஏற்பாடு அமையு மென்று தெரிகிறது

அமைச்சரவை அமைக்கும் படி திரு நெடுஞ்செழியனை தமிழ்நாடு கவர்னர் எந்நேரத் திலும் அழைக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நியூயோர்க்கிற்கு டாக் டர் ஹண்டே எந்த நேரத் திலும் செல்லலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்நாட்டுக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியில் இந்திரா காங் கிரஸ் பெற்ற வெற்றிகுறித்து நெடுஞ்செழியன் தமிழக அமை சரவையினதும் முதலமைச்சர் எம். ஜி. ஆரதும், தமிழக மக்களதும் வாழ்த்துக்களையும் ரஜீவுக்கு தெரிவித்துக்கொண் டார்.

## வைஜயந்தி வெற்றி

[சென்னை]

தென் சென்னை லோக்சபா தொகுதியில் இந்திரா காங் கிரஸ் வேட்பாளரும், முன் ஞள் திரைப்பட நடிகையுமான வைஜயந்திமாலா பாலி ஜன தாக்கட்சி மாநிலத் தலைவர் திரு. இரா செழியனை 48 000 மேலதிக வாக்குகளினுல் வெற்றிபெற்றுள்ளார்.

## மரண அறிவித்தல்

### திரு வ. பொன்னையா

(முன்னுள் பிறப்பு இறப்பு விவாகப் பதிவுகாரர்)

புங்குடுதீவு — 3

புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. வ. பொன்னையா அவர்கள் காலமாகிவிட்டார் இவர் காலம் சென்ற திருமதி தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் காலம் சென்றவர்களான திருமதி நல்ல முத்து திருமதி சின்னம்மா திருமதி தங்கம்மா, திரு சபாபதி மலேசியா) திரு செல்லையா (மலே சியா) ஆகியோரின் சகோதரனும் திருமதி சரஸ்வதி (மலேசியா) திருமதி கமலாம்பாள். திருமதி நீலாம்பாள். திரு. மகேந்திரன் (முருகன் ஸ்ரோர்ஸ் புங்குடுதீவு) மகேஸ்வரன் (ஆசிரியர் அனலைதீவு) ஆகியோரின் தகப் பனும் திரு I.S நாதன் (பொறியியலாளர் மலேசியா) காலம் சென்ற திரு A S, கனகசபாபதிப்பிள்ளை (வர்த்தகர் தரணியகல) டேவிட் சின்னத்தம்பி (இளைப்பாறிய விளையாட்டு அதிகாரி சிலாபம்) திரு மதி பகவதி, திருமதி பர்வதபத்தினி (ஆசிரியர் புங் குடுதீவு) ஆகியோரின் மாமனும் ஆவார் அன்னரின் ஈமைக்கிரிகைகள் ஞாயிற்றுக்கிழமை (30 - 12 - 84) காலை 10 மணிக்கு புங்குடுதீவு மணற்காடு மயானத் தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றுர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுககொள்ளவும். 11"1

# ஒரே பார்வையில்...

இந்திய லோக சபைத் தேர்தலில் போட்டியிட்ட முக் கிய அரசியல் கட்சிகள் பெற்றுள்ள இடங்களின் விபரம் வருமாறு:-

(இன்று நண்பகல் வரை வெளியான முடிவுகள்)

| | | |
|---|---|---|
| ✶ மொத்த இடங்கள் | – | 515 |
| வெளிவந்தவை | – | 483 |
| இந்திரா காங்கிரஸ் | – | 385 |
| ஜனதா | – | 10 |
| பாரதிய ஜனதா | – | 02 |
| காங்கிரஸ்-எஸ் | – | 04 |
| தெலுங்கு தேசம் | – | 28 |
| மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் | – | 19 |
| சுயேச்சைகள் | – | 07 |
| இந்திய கம்யூனிஸ்ட் | – | 04 |
| அண்ணு தி மு. க. | – | 12 |
| தி. மு. க. | – | 01 |
| தலித் மல்தூர் கிளான் | – | 03 |
| காங்கிரஸ் (ஜே) | – | 01 |

## தமிழ் நாடு சட்ட சபை

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்ட முக் கிய அரசியல் கட்சிகள் பெற்ற இடங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ✶ மொத்த இடங்கள் | – | 232 |
| இந்திரா காங்கிரஸ் | – | 62 |
| அ. இ. அ. தி. மு. க. | – | 133 |
| தி. மு. க. | – | 22 |
| ஜனதா | – | 03 |
| சுயேச்சை | – | 01 |
| மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் | – | 05 |
| இந்திய கம்யூனிஸ்ட் | – | 02 |
| காந்தி காமராஜ் | – | 02 |
| அகிலஇந்தியபார்வேட் புளக் | – | 01 |
| இந்திய யூனியன் முஸ்லிம் லீக் | – | 02 |
| தமிழ் நாடு பார்வேட் புளக் | – | 01 |

இப்பத்திரிகை ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the GeneralPo t office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org